Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 146
வியாழக்கிழமை 21 ஏப்ரல் 2022
சித்திரை 8 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16 | விலை : ரூ.40





கொழும்பு, காலிமுகத்திடலில் மக்கள் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகின்றது. நேற்று இரவும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

# பிரச்சினையைத் தீர்க்காவிடில் மகா சங்க ஆணை பிரகடனம்!

- அரசாங்கத்துக்கு பௌத்த மகாபீடங்கள் மிரட்டல்
- 19ஐ மீள நடைமுறைப்படுத்த வலியுறுத்து
- புதிய அமைச்சரவை பயனற்றது என அதிருப்தி

கொழும்பு, ஏப்ரல் 21

நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரம் பெற்று, மக்கள் போராட்டங்கள் வீரியமடைந்துள்ள நிலையில் நாட்டின் 3 பிரதான பௌத்த மகாபீடங்கள் இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. 15

## கட்டுக்கட்டாக காசை அடித்து தள்ளும் அரசு!

கொழும்பு, ஏப்.21

இலங்கை மத்திய வங்கி கடந்த இரு நாள்களில் பெருந்தொகை நாணயங்களை அச்சிட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 15

## கோத்தாபய பதவி விலகல்? சஜித் – சபாநாயகர் மோதல்!

### நாடாளுமன்றில் அமளி துமளி

கொழும்பு, ஏப்.21

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகும் விவகாரம் தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையே 15

## ரம்புக்கனைச் சம்பவத்தால் ஜனாதிபதிக்கு வருத்தமாம்!

கொழும்பு, ஏப்.21

அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் இலங்கை குடிமக்களின் உரிமைக்கு இடையூறு ஏற்படாது. ரம்புக்கனை பிரதேசத்தில் அனர்த்தத்துக்குக் காரணமான சம்பவம் தொடர்பில் பொலிஸார் பக்கச் சார்பற்ற வெளிப்படையான விசாரணைகளை முன்னெடுப்பார்கள் என்று ஜனாதி 04



## மக்கள் மீது துப்பாக்கிச் சூடு: கடுமை காட்டும் அமெரிக்கா!

கொழும்பு, ஏப்.21

கேகாலை, ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் இலங்கைக்கான அமெரிக் 04

## தமிழருக்கு நேரடியாக உதவும் பொறிமுறையை உருவாக்குக

### நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தமிழக முதலமைச்சரிடம் கோரிக்கை

சென்னை, ஏப்.21

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள தமிழ் மக்களுக்கு நேரடியாக உதவுவதற்கு சர்வதேச சமூகத்தின் பங்குபற்றலுடன் பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசு, தமிழக அரசிடம் கோரிக்கை 15

## வீடு உடைத்து 50 பவுண் திருட்டு!

### யாழ். நகர் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.21

திருநெல்வேலியில், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்குப் பின்புறமாக உள்ள அரச ஊழியர் ஒருவரின் வீடு உடைத்து 50 பவுண் 15

## அரசுக்கு எதிராக நேற்றும் மக்கள் போராட்டம் தீவிரம்

கொழும்பு, ஏப்.21

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரி நேற்றும் நாடு முழுவதும் போராட்டங்கள் தொடர்ந்தன. நேற்றுமுன்தினம் 15

## பளை விபத்தில் இளைஞர் சாவு!

### தந்தை படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.21

பளை, இயக்கச்சிப் பகுதியில் நேற்று நடந்த விபத்தில் 25 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரது தந்தை காயங்களுக்குள் 15

## வீடு புகுந்து கொள்ளை: இருவர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஏப்.21

ஏழாலைப் பகுதியில் வீடு புகுந்து நகைகளைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். 15

## கொள்கலன் ஊர்திகளின் கட்டணங்கள் அதிகரிப்பு

### பொருள்களின் விலைகள் இன்னும் உயரும் அபாயம்

கொழும்பு, ஏப்.21

கொள்கலன் ஊர்திகளின் போக்குவரத்துக் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது என்று அகில இலங்கை கொள்கலன் ஊர்தி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. இதனால் பொருள்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படலாம் என்று கூறப்படுகின் 04

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரம்புக்கனையில் பொலிஸார் மக்களைச் சுட்டது சரியே!

*முட்டுக்கொடுக்கிறார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்*



**கொழும்பு, ஏப். 21**

**ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூட்டுப்பிரயோகம் மேற்கொண்டமை சரியான செயலே - என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்று கருத்து வெளியிட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதுதொடர்பில் தெரிவித்ததாவது:-

ரம்புக்கனை துப்பாக்கிச்சூட்டு சம்பவம் குறித்து விசாரணையை செய்ய விசேட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. விசாரணையை விரைந்து முடித்து அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படும். மேலும் ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் சட்டத்துக்கு முரணான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இந்தச் சம்பவத்தில் அரசியல் தொடர்பு இருக்கின்றது. பொலிஸார் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படியே செயற்பட்டனர் - என்றார். (ம)

# இலங்கை என்பது ராஜபக்ச குடும்பத்தின் நாடு அல்ல!

*அரசு உடன் பதவி விலகவேண்டும் என்கிறார் அநுர பிரியதர்சன யாப்பா*



கொழும்பு, ஏப். 21

ஒரு குடும்பத்திடம் ஆட்சியைக் கொடுத்துவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் தூங்கிக்கொண்டிருக்க முடியாது.

எனவே, இடைக்கால சர்வகட்சி அமைக்க, இந்த அரசு உடன் பதவி விலக வேண்டும். இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போது சுயாதீன அணியின் உறுப்பினருமான அநுர பிரியதர்சன யாப்பா.

நாடாளுமன்றத்தில் இதுதொடர்பில் நேற்று கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது :-

நாட்டுமக்கள் இன்று வீதிகளில் உள்ளனர். அவர்களைத் தற்போது அச்சமும் சூழ்ந்துவிட்டது. எனவே, இந்த அரசு கட்டாயம் பதவி விலகியாகவேண்டும். ஆளுங்கட்சியைவிட எதிரணியில் சிறந்தவர்கள் உள்ளனர். அதனால்தான் நாமும் சுயாதீன அணியாக எதிரணி பக்கம் வந்துள்ளோம்.

அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் இடைக்கால அரசு அமைக்கவேண்டும். அந்த அரசின் ஊடாக அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரலாம். உண்மையைப் பேசாது, பொய்யுரைக்கும் ஆட்சியாளர்களால் முன்னோக்கிச் செல்லமுடியாது. இது எமது நாடு.

ஜனாதிபதியினதோ, பிரதமரினதோ அல்லது ராஜபக்ச குடும்பத்தினதோ நாடு கிடையாது. ஒரு குடும்பத்திடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு, தூங்கிக் கொண்டிருக்க முடியாது- என்றார். (ஒ-44)

# துப்பாக்கிச் சூடு நடத்துவதுதான் குறைந்தபட்ச பலப்பிரயோகமா?

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி*



கொழும்பு, ஏப். 21

ஜனநாயக வழியில் போராடும் மக்கள்மீது, துப்பாக்கிச் சூடு நடத்தி கொலை செய்வதுதான் பொலிஸாரின் குறைந்தபட்ச அதிகாரமா? என்று நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அத்துடன், ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைக்குழுவொன்று அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார். ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சபையில் முன்வைத்த கருத்துக்களை நிராகரிக்கின்றோம். அவர் சபையை தவறாக வழிநடத்த முற்படுகின்றார்.

தமது உரிமைக்காக ஜனநாயக வழியில் போராடிய இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இதற்கு ராஜபக்ச அரசு பொறுப்புக்கூற வேண்டும்.

பொலிஸார் குறைந்தபட்ச அதிகாரத்தையே பயன்படுத்தினர்என்று அறிவிப்புக்களை விடுக்கின்றனர். துப்பாக்கிச் சூடு நடத்துவதும், படுகொலை செய்வதும், அரச பயங்கரவாதத்துக்குத் துணைபோவதும்தான் குறைந்தபட்ச அதிகாரமா?

இந்தத் தீவிரவாத அரசு மக்களை ஒடுக்குவதற்கு முற்படுகின்றது.

ரதுபஸ்வெலயில் தண்ணீர் கேட்டுப் போராடியவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஊழியர் சேமலாப நிதியத்தைக் காக்கப் போராடிய ரொஷன் சானக்கவும் கொலை செய்யப்பட்டார். எனவே, இந்தப் படுகொலை செய்யும் அரசால் முன்னெடுக்கப்படும் விசாரணையை ஏற்கமுடியாது. பொலிஸாரின் விசாரணையிலும் நம்பிக்கை இல்லை. ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணையே வேண்டும்.

மக்கள் எரிபொருள் பவுஸரை எரிக்க வீதியில் இறங்கவில்லை. தமக்கு பால்மா வேண்டும், எரிவாயு வேண்டும் எனக் கோரியே போராடினர்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சமிந்த லக்ஷான் என்பவரின் குடும்பத்துக்கு உறுதுணையாக ஐக்கிய மக்கள் சக்தி நிற்கும்- என்றார். (ஒ-44)

## ரம்புக்கனை கேள்விக்கணை ஆரம்பமான 5 நிமிடங்களில் நாடாளுமன்றம் ஒத்திவைப்பு


கொழும்பு, ஏப். 21

நாடாளுமன்ற அமர்வுகள் நேற்றுப் புதன்கிழமை ஆரம்பமாகிய 5 நிமிடங்களிலேயே ஒத்திவைக்கப்பட்டன.

சபை அமர்வுகள் ஆரம்பமாகியபோது ரம்புக்கனை போராட்டத்தில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பின. குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதுகுறித்துக் கேள்வியெழுப்பினார்.

இந்த நிலையில், சபாநாயகர் நாடாளுமன்ற நடவடிக்கைகளை தொடரமுற்பட்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ரம்புக்கனையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்பட வேண்டுமென தெரிவித்தார்.

இதனையடுத்து ஏற்பட்ட அமைதியின்மையைத் தொடர்ந்தே, சபை அமர்வுகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார். (ம)



# ஓரிரு நாள்களில் நாட்டில் போராட்டம் வெடிக்கலாம்!

*நாட்டின் நிலை மிக ஆபத்தில் - நாடாளுமன்றில் ரணில் கவலை*

கொழும்பு, ஏப். 21

"நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை நீடிக்க இடமளிக்கக் கூடாது. தற்போது மாற்றுவழிகளும் இல்லாமற்போயுள்ளது. இன்னும் ஓரிரு நாள்கள் சென்றால் பிரச்சினை வெடித்துவிடும். எனவே நாடாளுமன்றம் ஊடாக தீர்வொன்றை எடுத்து அதனை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்துவோம்" - இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ரம்புக்கனை சம்பவத்துக்கு அரசியல் சாயம் பூசவேண்டாம். அது எதிரணிகளால் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சி அல்ல. நாட்டில் ஏனைய பகுதிகளிலும் போராட்டங்கள் இடம்பெற்றன. வீதிகள் மறிக்கப்பட்டன. ஆனால், ரம்புக்கனையில் மட்டும் அவசரம் காட்டப்பட்டது ஏன்? மக்கள் இடையூறு விளைவித்திருக்கலாம். ஆனால் பவுஸரை எரிக்கும் நிலையில் இருந்திருக்கமாட்டார்கள்.

சம்பவத்தில் உயிரிழந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் பவுஸரை எரிக்கும் நபரும் அல்லர். நாட்டுக்குத் தேவையான எரிபொருள் தற்போது கைவசம் இல்லை. சிறிமாவோ பண்டாரநாயக்க, நெருக்கடியான காலகட்டத்தில் கூட எரிபொருள் வழங்கினார். இந்த அரசு அதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை.

நாட்டின் தற்போதைய நிலை நீடிக்க இடமளிக்கக்கூடாது. தீர்வை வழங்கியாக வேண்டும். தீர்வுப் பொறிமுறை தொடர்பில் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடவேண்டும். தீர்வை ஜனாதிபதிக்கும், அரசுக்கும் தெரியப்படுத்த வேண்டும். ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை அவசியம் - என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோகத்தை குலைக்க இடமளியாதீர்கள்

*பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொதுமக்களிடம் கோரிக்கை*

**கொழும்பு, ஏப். 21**

**நாட்டில் எரிபொருள் போக்குவரத்து முறையை சீர் குலைக்கும் எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடு படவேண்டாம் என பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



இது தொடர்பில், சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்ததாவது:-
எரிபொருள் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்குப் பொதுமக்கள் பாதிப்பை ஏற்படுத்தும் சம்பவங்கள் நேற்று (நேற்றுமுன்தினம்) பதிவாகியுள்ளன. சில வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. எரிபொருள் விநியோகப் பொறிமுறை சீர்குலைந்தால் அது மருந்து, உணவு மற்றும் இதர பொருள்களின் போக்குவரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே பொதுமக்கள் எரிபொருள் கொண்டுசெல்லும் வாகனங்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும் - என்றார். (ம)

*ரம்புக்கனை சம்பவம்*

## சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும்

*சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து*

கொழும்பு, ஏப். 21
ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.
போராட்டங்களில் ஈடுபடுபவர்களின் நலன்களைக் கவனத்தில் கொண்டு பொலிஸாரும் பாதுகாப்பு தரப்பினரும் நிதானத்தைக் கடைப்பிடிப்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (ம)

## ரம்புக்கனை அசம்பாவிதம் விசாரணைக்கு தனிக்குழு!

கொழும்பு, ஏப். 21
ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக, மூவர் கொண்ட குழுவை நியமித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்டியில் உள்ள அலுவலகத்திலிருந்து விசேட குழு ஒன்று சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## ரம்புக்கனை தாக்குதலுக்கு குமார் சங்கக்கார கண்டனம்

கொழும்பு, ஏப். 21
ரம்புக்கனையில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்து பலர் காயமடைந்த சம்பவத்துக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்டவீரர் குமார் சங்கக்கார தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.
இது தொடர்பாக அவர் தனது ருவிற்றர் பதிவில், நிராயுதபாணியான எதிர்ப்பாளர்களுக்கு எதிராக மரண சக்தியைப் பயன்படுத்துவது மனச்சாட்சிக்கு விரோதமானது. மன்னிக்க முடியாதது. மக்களின் உயிரைப் பாதுகாப்பது பொலிஸாரின் முதல் பொறுப்பு. இது வெட்கக்கேடான கொடூர நிகழ்வு - எனக் குறிப்பிட்டுள்ளார். (ம)

## ரம்புக்கனை தாக்குதலை ஏற்றுக்கொள்ள முடியாது

*ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்*

கொழும்பு, ஏப். 21
ரம்புக்கனையில் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கையிட்டுள்ளது.
எந்தவொரு தரப்பினர் மீதான வன்முறையும் கண்டிக்கத்தக்கது. ரம்புக்கனையில் பதிவாகிய உயிரிழப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வுகாண அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (ம)

# மரியாதையுடன் சேவையாற்றும் பொலிஸாரால் பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படும்

*பிரதமர் மஹிந்த இவ்வாறு தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 21
ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில், நாட்டுக்கு எப்போதும் மிகுந்த மரியாதையுடன் சேவையாற்றும் இலங்கைப் பொலிஸாரால் பக்கசார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படும் என்று நம்புகின்றேன் என்று தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:
ரம்புக்கனையில் இடம்பெற்ற அனர்த்தத்தைத் தொடர்ந்து நான் மிகுந்த மன வேதனை அடைந்துள்ளேன். நாட்டுக்கு எப்போதும் மிகுந்த மரியாதையுடன் சேவையாற்றும் இலங்கைப் பொலிஸாரால் பக்கசார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படும் என்று நான் நம்புகின்றேன். போராட்டக்காரர்கள் தங்கள் குடிமை உரிமையில் சம மரியாதை மற்றும் கௌரவத்துடன் ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன் - என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)






செத்தமாட்டில உண்ணி ஒட்டிக்கொண்டிருக்காது. ஒவ்வொண்டா இறங்கிடும். அதுமாதிரித்தான் இப்ப அரசாங்கமும் கிட்டத்தட்ட செத்துப்போன நிலையில இருக்குது. என்னதான் புது அமைச்சரவையை கொண்டந்து வித்தை காட்டினாலும் அதுக்கு சனம் மசியேலை. கோத்தாவும் போகோணும், அவரின்ர குடும்பமும் போகோணும், அரசாங்கமும் போகோணும் எண்ட கோரிக்கையைச் சனங்கள் கடைசி மட்டும் கைவிடாதுகள் எண்டதைத்தான் இப்ப தொடர்ந்து நடக்கிற போராட்டங்கள் காட்டுது.

இப்பிடிப்பட்ட நிலையில கொஞ்சப் பேர் பதவிக்கு ஆசைப்பட்டு பல்டி அடிச்சவை. ஆனால் அப்பிடி பல்டி அடிச்சதை அறிஞ்ச சனங்கள் அவையை நேரிலையும், பேஸ்புக்கிலையும் 'நல்லா' கவனிக்கத் தொடங்கிட்டினம். அதால பதவி கிடைச்சும் அதை அனுபவிக்க ஏலாம அவை இருக்கினம். அண்டைக்கு கூட பதவிக்காக கட்சி தாவின சாந்த பண்டார ' என்ர வீட்டைச் சுத்தி போராடாதையுங்கோ. உங்களால என்ர சின்னப்பிள்ளை சாப்பிடாமல் அழுது கொண்டிருக்கிறா' எண்டு கண்ணீர் விட்டு கதறினார். கிட்டத்தட்ட அதேநிலைதான் மற்றவைக்கும். அதோட இப்ப பார்லிமெண்ட் கலைஞ்சு எலக்சன் வந்தால், கட்சி தாவினவை எந்த முகத்தோட சனத்திட்ட வாக்குக் கேட்டுப் போவினம்? விளக்குமாத்தால தான் அடிவாங்குவினம். அற்ப பதவிக்கு ஆசைப்பட்டு, இருந்த வாக்கும் பறிபோன கதைதான் அவைக்கு.
ஆனாலும் எல்லா எம்.பி மாரும் இப்பிடி மொக்குத்தனமா ஆக்கள் இல்லை. இனியும் அரசாங்கத்தோட ஒட்டிக் கொண்டிருந்தால், தங்கட எதிர்காலம் 'அம்போ' எண்டு அவைக்கு வடிவாத் தெரிஞ்சு போச்சு. அதால அரசாங்கத்தை விட்டு வெளியில சிலர் வரப்போகினம். குறிப்பா இன்னும் ரண்டு, மூண்டு நாளுக்குள்ள, அவ்வளவு ஏன் இதை நீங்கள் படிச்சுக் கொண்டிருக்கேக்க கூட, அரசாங்கத்தை விட்டு ஐஞ்சு பேர் எதிர்ப்பக்கம் தாவப்போகினம். இது சம்பந்தமா எதிர்க்கட்சியளோட பேச்சுவார்த்தையெல்லாம் முடிஞ்சுதாம். ஈஸ்டர் நாளில மாறுறதுதான் பிளானாம். அப்பிடி அவையும் தாவினால் அரசாங்கத்துக்கு சாதாரண பெரும்பான்மைப் பலம் இல்லாமல் போகும். அப்பிடிப் பெரும்பான்மை இல்லாட்டி, எதிர்க்கட்சி கொண்டந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வெல்லவும் கூட சான்ஸ் இருக்கு. கிட்டத்தட்ட கடைசிப் புள்ளியில அரசாங்கமும், ஜனாதிபதியும் நிக்கினம். இனியும் ஆட்சியை விட்டு போகமாட்டம் எண்டு அடம் பிடிச்சால், அரசாங்கத்தில இருக்கிறவை ஒவ்வொருத்தரா எதிர்ப்பக்கம் கழண்டு வர, ராஜபக்ச குடும்பக்காரர் மட்டும் தான் மிஞ்சுவினம் போல. இண்டைக்கு ஈஸ்டர் குண்டுவெடிப்பு நடந்து மூண்டு வருசம். அப்பிடி பலி கொடுத்து ஆட்சிக்கு வந்தவைக்கு, அதே ஈஸ்டரில கடவுள் குடுக்கிற தண்டனையா இந்த பெரும்பான்மை இழப்பு இருக்கும் போல. பெரும்பான்மை போனால், ஆட்சியே போன மாதிரித்தானே.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் கேள்விக்கு பதில் கிடைத்தால் தோள் சேர்ந்து போராடுவதற்குத் தயார்

## போராட்டங்களுக்கு தார்மீக ஆதரவு தெரிவித்து தமிழ் சிவில் சமூக அமையம் அறிக்கை

**யாழ்ப்பாணம், ஏப்.21**

**இலங்கையின் இன்றைய பொருளாதார நிலை தொடர்பாகத் தெற்கில் பொதுமக்கள் மேற்கொண்டுவரும் அனைத்து வகையான எதிர்ப்புப் போராட்டங்களுக்கும் தார்மீக ஆதரவைத் தெரிவித்துள்ளது தமிழ் சிவில் சமூக அமையம். தமிழ் சிவில் சமூக அமையம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது: தமிழர்களாகிய எமது கடந்த எட்டு தசாப்த கால வாழ்வியல் அனுபவம், மனத் தடைகள் ஏதுமின்றித் தெற்கின் பொதுமக்களுடன் அவர்களின் போராட்டங்களில் கைகோர்ப்பதைத் தடுத்து நிற்கின்றது.**

இலங்கையின் இன்றைய பொருளாதார கையறு நிலைக்கு காரணமானவர்கள் ராஜபக்ச குடும்பத்தினரே என்று நிறுவி நிற்கின்றனர் தென் பகுதி மக்கள். அவர்கள் கோத்தா கோ கோம் என்ற கோஷத்துடன் வரலாறு காணாத வகையில் எழுச்சி பெற்றுள்ளனர். ஆனால் தமிழர்களாகி எங்களது வேதனை மிகு வரலாறு வேறு விதமான அனுபவத்தையே தருகின்றது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலும் மஹிந்தவை வீட்டுக்கு அனுப்புதல் என்ற கருப்பொருளிலேயே வெற்றி கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புதல் மட்டும் போதுமானதல்ல என்பதைக் காட்டும் மிக அண்மைய வரலாற்று உதாரணம் அது. இந்த ஆட்சி மாற்றத்தால் தமிழ்த் தேசத்தின் கட்டமைப்புகள் மீது காலம் காலமாக நடத்தப்பட்டு வந்த கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகளில் எந்த மாற்றமோ, தொய்வோ ஏற்படவில்லை என்பதை எம்மால் மறக்க முடியாதுள்ளது.

ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ்த் தேசத்தை இனவழிப்புச் செய்வதற்காகத் தொடர்ச்சியாகச் செய்துவருபவை, அனைத்து நாட்டின் பொருளாதார நலன்களுக்கும், அபிவிருத்திக்கும் பாதகமானவை என்றோ, பொருளாதாரத்தை வீழ்த்தும் என்றோ தெற்கில் ஒரு சிலரைத் தவிர எவருமே உறுதியாகக் கூறியதில்லை, யாருமே எதிர்த்து நின்றதில்லை, இன்றும் கூட யாரும் கூறவுமில்லை, மாறாக இத்தகைய இனவழிப்பு நாசங்களைச் செய்வோம் என்று வாக்குறுதி தந்தவர்களே தேர்தலில் வெற்றி பெற வைக்கப்பட்டனர், செய்தவர்கள் தேசிய வீரர்களாகப் போற்றப்பட்டனர்.

தங்களுக்கு எதிராக இத்தகைய இனவழிப்பு விடயங்களுக்கு எதிராக தமிழ் மக்கள் ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக நடத்திய சாத்வீகப் போராட்டங்கள் வன்முறை கொண்டு அடக்கப்பட்டன. இதே காலிமுகத் திடலில் 66 ஆண்டுகளுக்கு முன்னர் 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி அமைதியாகத் தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. அதேநாள் கல்லோயா குடியேற்றப் பகுதியில் 150 தமிழ் விவசாயிகள் கொல்லப்பட்டனர். மனிதாபிமான அடிப்படையில் அன்றி, ஆகக் குறைந்தது நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாதகமானது என்ற அளவில் கூட தெற்கில் இருந்து எந்த ஒரு அரசியல்வாதியும் குரலெழுப்பியதில்லை. அவ்வாறு குரலெழுப்பக்கூடிய ஒரு அரசியல் அங்கு தோற்றம் பெற்றதும் இல்லை. அதற்கான பிரதிபலிப்பு தென்பகுதி மக்களிடம் கூடக் காணப்படவில்லை.

தமிழர்கள் இவ்வாறெல்லாம் தமது நியாயமான அரசியல் வாழ்வுரிமைகள் பறிக்கப்பட்டு, சாத்வீக வழிப் போராட்டங்களும் வன்முறைகள் மூலம் புறக்கணிக்கப்பட்ட போது ஆயுதமேந்திப் போராட வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர். அப்போது தமிழர்களுடனான முரண்பாடுகளை வன்முறையற்ற வழிகளில் தீர்க்க வேண்டும் என்று தெற்கில் இருந்து யாரும் புறப்பட்டதில்லை. அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுத்ததில்லை. மாறாக நாட்டின் செல்வத்தை அழித்தும், கடன்களை வாங்கியும் இனவழிப்புப் போரைத் தொடர்ந்த அரசின் ஆயுத அடக்குமுறைகளுக்கு தெற்கு எப்போதும் ஆதரவாக இருந்ததுடன், அதற்குப் பொருத்தமானவர்கள் என்று தாம் கருத்தியவர்களையே தேர்தல்களில் தெரிவு செய்தும் வந்தது.

முள்ளிவாய்க்காலின் பின்னரான போர் ஓய்ந்த கடந்த 13 ஆண்டுகளில்கூட இலங்கையில் அந்நிய முதலீடுகள் அதிகரிக்காததையிட்டு இலங்கை அரசாங்கங்கள் மட்டுமல்ல தென்பகுதி மக்களும், புத்திஜீவிகளும் கவலை கொண்டதில்லை. போர்க் குற்றங்களுக்காக இலங்கை ஜெனிவாவில் சிக்கல்களைச் சந்தித்தபோதோ அல்லது மனித உரிமைத் தரக் குறைவுக்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இழந்தபோதோகூட மனித உரிமை நிலைமைகளைச் சீரமையுங்கள், தமிழர்களுக்குட்பட்ட ஏனைய தேசங்களினதும், சமூகங்களினதும் உரிமைக் கோரிக்கைகளைச் சுமுகமான வழிமுறைகளில் தீர்த்துக்கொள்ளுங்கள், அதன்மூலம் பொருளாதாரத்தைக் காப்பாற்றுங்கள் என தெற்கில் இருந்து எந்தக் குரலும் எழுந்ததில்லை. மாறாக இலங்கை அரசு மனித உரிமைகளை வலியுறுத்தாத, தமிழர்களுக்காகப் பரிந்து வராமல் நிதியுதவி செய்யக்கூடியவர்கள் என்று தாம் கருதிய நாடுகளிடம் நிதியுதவி கோரிச் சரணடைந்தது. அதையே தெற்கும் வரவேற்றிருந்தது. இன்றைய இந்தப் பொருளாதார நிலைக்கு இவையுமே காரணம் என்பதே எமது புரிதலாகும்.

இன்றும்கூட நாட்டின் சகல சிக்கல்களுக்கும் காரணமாக இனச் சிக்கல்கள் தொடர்பிலும், அவற்றுக்குக் காரணமாக பௌத்த சிங்கள மேலாதிக்க அபிலாஷைகள் தொடர்பிலும் தெற்கின் அரசியல்வாதிகள் மத்தியில் மட்டுமன்றி, எழுச்சி பெற்று நிற்கின்ற பொது மக்களிடமும், அவர்களுள் பெருமெடுப்பில் பங்குகொள்ளும் இளையோரிடமும், அவர்களால் ஆள்வதற்குப் பொருத்தமானவர்கள் என்று பரிந்துரைக்கப்படும் புத்திஜீவிகளிடமும் முற்போக்கான மாற்றங்களேதும் ஏற்பட்டதாக எமக்குத் தெரியவில்லை. காலிமுகத்திடலில் தன்னெழுச்சியாகக் கூடியுள்ள இளையோர்களிடமிருந்துகூட இவை தொடர்பாகக் காத்திரமான குரலேதும் வெளிப்பட்டதாக நாம் உணரவில்லை.

அரசியல்வாதிகள் எம்மைப் பிரித்துவிட்டனர், நாம் எல்லோரும் இலங்கையர்கள், தமிழிலும் தேசிய கீதம் பாடலாம் என்ற மேம்போக்கான அறைகூவல்கள் விடப்படுகின்றனவே தவிர, தமிழர்கள் உட்பட இந்த நாட்டின் ஏனைய தேசங்களினதும், சமூகங்களினதும் நியாயமான கரிசனைகள் மற்றும் அச்சங்கள் தொடர்பில் காத்திரமான மாற்றம் எதையும் இன்று போராடுபவர்களிடையே இருந்தும்கூட யாரும் முன்மொழிந்ததை நாம் காணவில்லை. காலிமுகத் திடலில் தேசிய கீதம் பாடப்படுவதை விடவும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பன்மடங்கு கடுமையானது, வலி மிகுந்தது, அச்சம் தரக்கூடியது. ஒரு தேசமாக எமது இருப்பு இந்த நாட்டில் எந்தளவுக்கு அச்சுறுத்தலில் உள்ளது என்பதை இன்று போராட எம்மை தெற்கிலிருந்து அழைக்கும் யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இத்தனை நாளில் காலிமுகத்திடலில் இருந்துதான் ஓரளவுக்குக் கட்டமைக்கப்பட்ட சில முன்மொழிவுகள் ராஜபக்ச ஆட்சிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் அந்த முன்மொழிவுகளில் ஒன்றுகூட தமிழ் மக்களினதும் ஏனைய தேசங்களினதும், சமூகங்களினதும் துயரங்களுக்கான விடைகளாகக் காணப்படவில்லை. சொல்லப்போனால் இவர்களால் கூட நாட்டின் இன்றைய பொருளாதாரச் சிக்கல்களுக்கு உண்மையான அடிப்படைக் காரணமான சிங்கள பௌத்த மேலாதிக்க அபிலாஷைகளுக்கு மாற்றீடுகள் முன்வைக்கப்படவில்லை.

இந்தப் பின்னணியில் தமிழர்களாகிய நாம் இன்று தெற்கில் ஏற்பட்டிருக்கின்ற எழுச்சிகள் தொடர்பாக கரிசனையுடன் அணுகும் அதேவேளையில் தமிழர்களாகிய எமக்கு போராட்டக்காரர்களுடன் கைகோர்ப்பது தொடர்பில் எமது நீண்டகால இருப்புத் தொடர்பான கரிசனைகளுடனான பரிசீலனையுடன் கூடிய முடிவுகளை அவதானமாக எடுப்பதைத் தவிர வேறு வழியேதும் இல்லை என்றே தெரிகின்றது.

இன்று தெற்கில் போராடிக் கொண்டிருக்கும் உங்களுக்கு எமது தோழமையைத் தெரிவிக்க விரும்புகின்றோம். உறுதியாகத் தெரிவிக்கின்றோம். நீங்கள் இன்று போராடப் புறப்பட்டதற்கான காரணங்களான பொருளாதார விடயங்கள் எம்மையும் தாக்குகின்றன தாம். ஆனால் எம் தோழ்களை உங்களுடன் இணைப்பதில் எங்களுக்கு உள்ள மனத் தடையை ஏற்படுத்தக் காரணமாக இருப்பது தமிழர்களாகிய எம் மனதில் எழுந்து நிற்கின்ற அச்சமும், களைப்பும் தருகின்ற கேள்வியொன்றே. ஒரு தேசமாக எமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பான எங்களது நீண்டகாலக் கேள்விகளுக்கு தங்களிடமாவது பதிலேதும் உண்டா? -என்றுள்ளது. (எ-இ)

---

### கொள்கலன்...

றது. எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து நாட்டில் பல பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் கொள்கலன் ஊர்திகளின் போக்குவரத்துக் கட்டணம் நேற்றுமுதல் 65 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை கொள்கலன் ஊர்தி உரிமையாளர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

அதேவேளை, நாட்டில் தற்போதுள்ள நிலைமை காரணமாக எரிபொருள் தாங்கி வாகன உரிமையாளர்கள் சேவை வழங்குவதில் இருந்து விலகிக் கொள்வது தொடர்பாக ஆலோசிக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டில் தற்போது மக்கள் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், பாதுகாப்புக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (அ-எ-இ)

### ரம்புக்கனைச்...

பதி கோத்தாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துக் குடிமக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கும் போது வன்முறையைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (அ-எ-இ)

### மக்கள் மீது...

கத் தூதுவர் ஜூலி சாங், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். நேற்று புதன்கிழமை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

ரம்புக்கனையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். பலர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் உடனடியாகக் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் நேற்று அவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இது தொடர்பில் அவர் பதிவிட்டுள்ள ருவிற்றர் பதிவொன்றில், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறையால் இழைக்கப்பட்ட அநீதி மற்றும் ரம்புக்கனை வன்முறை தொடர்பில் முழுமையான, வெளிப்படையான விசாரணையின் தேவை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடப்பட்டது.

அமைதியான போராட்டக்காரர்கள் உட்பட அனைத்து இலங்கையர்களின் உரிமைகளையும் பாதுகாப்புப்பணியைத் தவிர வேறு எந்த விடயமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முக்கியமானதாக இருந்ததில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் வீடு முற்றுகை



கொழும்பு,ஏப்.21
தங்காலையிலுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வீட்டை முற்றுகையிட்டு நேற்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
எரிபொருள் விலை அதிகரிப்பை அடுத்து நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் முதல் பரவலாக மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தங்காலையில் கால்டன் சுற்றுவட்டப் பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், பிரதமரின் வீட்டை முற்றுகையிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)



## காலி வீதி முடக்கம்

கொழும்பு,ஏப்.21
எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டம் காரணமாக பலப்பிட்டிய பிரதேசத்தில் காலி வீதி நேற்று முற்றாகத் தடைப்பட்டுள்ளது.
குறித்த வீதியின் குறுக்கே கார்கள் மற்றும் பேருந்துகளை நிறுத்தி அந்தப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. (க-இ)

## பேருந்துச் சேவைகள் நேற்று இடைநிறுத்தம்

கொழும்பு,ஏப்.21
நாடுமுழுவதும் நேற்று ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளதால், அனைத்துப் பேருந்துச் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.
நேற்று அதிகாலை பேருந்துச் சேவைகள் இடம்பெற்றபோதும், காலை 6.30 மணிக்குப் பின்னர் அனைத்துச் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டன.
நாடுமுழுவதும் 300 க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஹர்த்தாலை முன்னெடுத்துள்ள நிலையில், இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துகள் நேற்று திடீரென சேவைகளை நிறுத்தியுள்ளன.
ஆனால், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள், வடக்கு மாகாணத்துக்குள் இயங்கின. (க-இ)

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு நீதிகோரி சிலுவையைத் தாங்கியவாறு போராட்டம்



கொழும்பு,ஏப்.21
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி, சிலுவையைத் தாங்கியவாறு நடிகர் ஜெஹான் அப்புஹாமி நேற்றுமுன்தினம் முதல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
நீர்கொழும்பு- கட்டுவாபிட்டிய பகுதியில் இருந்து ஜெஹான் ஹப்புஹாமி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.
இன்று கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தை வந்தடைந்ததன் பின்னர், காலிமுகத்திடல் நோக்கி, ஜெஹான் அப்புஹாமி சிலுவையைச் சுமந்து செல்லவுள்ளார். (க-இ)



## போராட்டக்காரர் மீது கண்ணீர்ப்புகை வீச்சு

கொழும்பு,ஏப்.21
எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசியுள்ளனர். மாத்தறை மகாநாம பாலத்துக்கு அருகில் பிரதான வீதியை மறித்து எதிர்ப்பில் ஈடுபட்டவர்களைக் கலைக்கவே பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியுள்ளனர். இதன்போது 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)

## பசறையில் வீதி மறியல்

கொழும்பு,ஏப்.21
பசறை. பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யூரி தோட்ட மக்கள் நேற்று முதல் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
பதுளை - பசறை பிரதான வீதியின் ஒரு பகுதியை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
வீதியில் ரயர்களை எரித்தும். பதாகைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியவாறும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (க-இ)

## காலிமுகத்திடலில் தேரர் உணவு தவிர்ப்பு



கொழும்பு,ஏப்.21
அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் இடம்பெற்றுவரும் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில், தேரர் ஒருவர் நேற்றுமுதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
திரிபேஹ சிறிதம்ம தேரரே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தைப் பதவி விலகக்கோரி கடந்த 9 ஆம் திகதியில் இருந்து காலிமுகத்திடலில் மக்களின் எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.
இதற்குப் பலரும் ஆதரவு தெரிவித்து வரும் நிலையில், திரிபேஹ சிறிதம்ம தேரரும் உணவு தவிர்ப்புடன் போராட்டத்தில் இணைந்துள்ளார். (க-இ)



## யாழ்ப்பாணத்தில் நேற்று இயல்புநிலை

யாழ்ப்பாணம்,ஏப்.21
தொழிற்சங்கங்களால் நேற்று முதல் ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும் யாழ்ப்பாணத்தில் இயல்புநிலையே காணப்பட்டது.
நகரப்பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வழமையான செயற்பாடுகள் இடம்பெற்றன. தென்மராட்சிப் பிரதேசத்தில் பெருமளவு வணிக நிலையங்கள் திறந்திருந்தன. சந்தைகளும் திறந்திருந்தன.
வீதிப்போக்குவரத்துகளும் வழமையாகவே இருந்தன.
அனைத்து அரச, தனியார் அலுவலகங்கள், வங்கிகள் திறந்திருந்தன. பாடசாலைகளும் செயற்பட்டன.
எனினும் மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்பட்டது. (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டு பலன்கள் 2022



மங்கலகரமான **'சுபகிருது'** புத்தாண்டு கடந்த 14.04.2022 வியாழக்கிழமை அன்று பிறந்தது. குரு வாரத்தில், குருபகவான் தன் சொந்த வீடான மீனராசியில் இருக்கும் நேரத்தில் பிறக்கும் இந்தப் புத்தாண்டு பல்வேறு நன்மைகள் தரப்போகிறது. சுபகிருது என்றாலே நற்செய்கை என்று பொருள். சுபகிருது வருடத்தில் நாடெங்கும் நல்ல மழை பெய்யும் சுபீட்சமாக விளங்கும் என தமிழ் பஞ்சாங்கம் கணித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக நோய்களின் பிடியில் சிக்கித்தவித்த மக்கள் இந்த ஆண்டு நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.

## மகரம்



மன்னிக்கும் குணம் கொண்ட நீங்கள் மனதில் உள்ளதை மறைக்காமல் பேசுபவர்களே! உங்கள் ராசிக்கு 2 ஆம் வீட்டில் சுக்கிரன் அமர்ந்திருக்கும்போது இந்த சுபகிருது வருடம் பிறப்பதால் இடைவிடாது போராடி வெற்றிபெறுவீர்கள்.

சாதுர்யமாகவும், சமயோஜிதமாக யோசித்து பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும்.

புது வாகனம் அமையும். தள்ளிப்போன திருமணப்பேச்சு கூடி வரும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த வேலைகள் முடிவடையும்.

இந்த சுபகிருது வருடம் உங்கள் ராசிக்கு 8 ஆம் வீட்டில் பிறப்பதால் எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள்கூட போராட்டத்துக்கு பின்பு முடியும். ஒரு பக்கம் பணம் வரும் என்றாலும் செலவுகள் இருமடங்காக இருந்து கொண்டேயிருக்கும். வேலைச்சுமை அதிகரிக்கும்.

3 ஆம் வீட்டுக்கு குரு செல்வதால் முதல் காரியத் தடைகள் அதிகரிக்கும். முதல் முயற்சியிலேயே எந்த ஒரு வேலையையும் முடிக்கமுடியாமல் இரண்டாவது அல்லது மூன்றாவது முயற்சியில் போராடி முடிக்க வேண்டிவரும்.

இளைய சகோதரர் ஆதரவாக இருப்பார். பணத்தட்டுப்பாடு அதிகரிக்கும். தவிர்க்க முடியாத செலவினங்களும் வந்து போகும். எனினும் தந்தைவழியில் உதவிகள் உண்டு.

இந்தாண்டு முழுக்க சனிபகவான் ராசியிலேயே அமர்ந்திருப்பதால் எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வீடு வாங்குவீர்கள்.

சிலர் புது மனை புகுவீர்கள். என்றாலும் ஜென்மச் சனியாக தொடர்வதால் உடல் நலம் பாதிக்கும். வருடம் முடியும் வரை 4 இல் ராகு நிற்பதால் வேலைச்சுமை அதிகரிக்கும். தாயாருடன் மனஸ்தாபங்கள் வெடிக்கும். வாகனம் தண்டச்செலவு வைக்கும். கேது 10ஆம் வீட்டுக்குள் வருவதால் உத்தியோகத்தில் எதிர்ப்புகள், திடீர் இடமாற்றம், குடும்பத்தில் அதிருப்தி வந்து நீங்கும். 13.07.2022 முதல் 07.08.2022 வரை சுக்கிரன் 6இல் மறைவதால் சிறுசிறு வாகன விபத்துக்கள் வந்து நீங்கும்.

**வியாபாரிகளே,**

போட்டிகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் சில யுக்திகளைக் கையாளுவீர்கள். சந்தை நிலைவரமறிந்து லாபத்தைப் பெருக்குவீர்கள். சித்திரை, ஆனி மாதங்களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். விளம்பர யுக்திகளைக் கையாண்டு லாபத்தை இரட்டிப்பாக்குவீர்கள்.

ஆவணி, கார்த்திகை மாதங்களில் பங்குதாரர்களுடன் பிரச்சினை நீங்கும். மாசி, பங்குனி மாதங்களில் கடையை விரிவுபடுத்துவீர்கள். சிலர் சொந்த இடத்துக்கு மாறுவார்கள். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். சட்டத்துக்குப் புறம்பான வகையில் செல்லவேண்டாம்.

**உத்தியோகஸ்தர்களே,**

உங்களின் தனித்திறமையை அதிகப்படுத்திக்கொள்வீர்கள். வெகுநாள்களாக எதிர்பார்த்திருந்த பதவியுயர்வு, சம்பள உயர்வு எல்லாம் சித்திரை, ஆனி மாதங்களில் உண்டு. அவ்வப்போது வேலைச்சுமை, பதற்றம் என வந்தாலும் கலகலப்பான சம்பவங்களும் உண்டு. உயரதிகாரியுடன் நெருக்கமாக இருந்தாலும் சக ஊழியர்களால் தொந்தரவு உண்டு. கார்த்திகை, பங்குனி மாதங்களில் புதிய வாய்ப்புக்கள் கிட்டும். கணினித் துறையினர்களுக்கு வெளிநாட்டுத் தொடர்புடைய நிறுவனத்திலிருந்து நல்ல வாய்ப்புக்கள் தேடி வரும்.

**இந்த சுபகிருது ஆண்டு**
**அடுத்தடுத்து வேலைச்சுமையால்**
**ஆரோக்கியத்தைக் குறைத்தாலும்,**
**வெற்றியையும் தரும்.**

## குருப்பெயர்ச்சி பலன்கள்



மகரம்

**சுபகிரகமான அதிசார குரு பெயர்ச்சி கடந்த 14ஆம் திகதி கும்பத்திலிருந்து மீன ராசிக்கு நிகழ்ந்தது. இந்தப் பெயர்ச்சியால் ஏற்படும் பலன்கள் 12 ராசிகளுக்குப் பார்ப்போம்.**

பிரச்சினைகளைக் கண்டு பின்வாங்காத திடசிந்தனைமிக்க மகர ராசி அன்பர்களே! இதுவரையில் 2ஆம் வீட்டில் அமர்ந்து ஓரளவு பணப் புழக்கத்தைத் தந்துகொண்டிருந்தார் குருபகவான்.

14.04.2022 முதல் 22.04.2023 வரை. ராசிக்கு 3ஆம் வீட்டில் அமர்கிறார். ஆகவே, எதையும் திட்டமிட்டுச் செய்யப் பாருங்கள். ஒவ்வொரு பணியையும் இரண்டு மூன்று முறை முயன்று போராடி முடிக்கவேண்டி வரும். சிலருக்கு வாயுக்கோளாறு ஏற்பட வாய்ப்பு உண்டு.

வீண் கௌரவத்துக்காக சேமிப்பைக் கரைக்க வேண்டாம். யாருக்காகவும் பிணை கையெழுத்திட வேண்டாம். புதிய அன்பர்களை வீட்டுக்கு அழைத்துச் செல்லவேண்டாம். வாகனத்தில் செல்லும்போதும் பயணத்திலும் கவனம் தேவை. மற்றவர்களை நம்பி குறுக்கு வழியில் செல்லவேண்டாம்.

வீட்டில் வாழ்க்கைத் துணைவருடன் சச்சரவுகள் வந்தாலும், அன்பும், அந்நியோன்னியமும் குறையாது. முக்கியமான வேலைகள் பொறுப்புக்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காதீர்கள். தவறுகள் நிகழ வாய்ப்பு உண்டு. ஆகவே, எதையும் நீங்களே முன்னின்று முடிக்கப்பாருங்கள்.

**14.04.2022 முதல் 29.04.2022 வரை**

உங்களின் சேவக, விரயாதிபதியான குரு பகவான் தன் நட்சத்திரத்திரமான பூரட்டாதி 4ஆம் பாதத்தில் செல்வதால் வீடு கட்டுவது. வாங்குவது நல்ல விதத்தில் முடியும். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. வழக்கு சாதகமாகும்.

**30.04.2022 முதல் 24.02.2023 வரை**

சனிபகவானின் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் பணவரவு அதிகரிக்கும். ஆனால் செலவுகளும் துரத்தும். வயிற்றுவலி, முதுகுவலி வந்து நீங்கும். பழைய வாகனத்தை மாற்றுவீர்கள். 08.08.2022 முதல் 16.11.2022 வரை உத்திரட்டாதி நட்சத்திரத்திலேயே குருபகவான் வக்ரத்தில் செல்வதால், குடும்பத்தில் அடுத்தடுத்து மகிழ்ச்சி தங்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். சிலருக்குப் புது வேலை கிடைக்கும்.

**24.02.2023 முதல் 22.04.2023 வரை**

குருபகவான் உங்களின் ரோக, பாக்கியாதிபதியான புதனின் ரேவதி நட்சத்திரத்தில் செல்கிறார். கௌரவப் பதவிகள் கிடைக்கும். பழைய கடனில் ஒரு பகுதியை அற வீடு செய்வீர்கள். தந்தையுடன் மோதல் போக்கு நீங்கும். சொத்துக்கள் வந்து சேரும்.

**வியாபாரத்தில்**

இயன்றவரையிலும் சுய ஆளுமையுடன் செயற்படுங்கள். மற்றவர்களின் பேச்சைக் கேட்கவேண்டாம். புதிய முதலீடுகள் செய்யும்போது சந்தை நிலைவரத்துக்கு ஏற்ப செயற்படுங்கள்.

**உத்தியோகத்தில்**

எந்தவித மனக்குறைகள் இருந்தாலும் உள்ளுக்குள் வைத்துக்கொள்ளுங்கள். எவரிடமும் விமர்சனங்களை வெளிப்படுத்த வேண்டாம். மேலதிகாரி சிற்சில தருணங்களில் உங்களோடு முரண்பட்டாலும், முக்கிய பொறுப்புக்களை உங்களிடமே ஒப்படைப்பார். சிலருக்குத் திடீர் இட மாற்றமும் உண்டு.

**மொத்தத்தில் இந்தக்**
**குருப்பெயர்ச்சி, உங்களை**
**வெற்றிப்பாதைக்கு அழைத்துச்**
**செல்வதாகவே அமையும்.**

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் உங்களுக்கு மகிழ்ச்சி குறையாது. பேச்சில் கவனம் செலுத்தினால் பிரச்சினை எதுவும் வராது. அடக்கமாக நடந்து கொள்வது நல்லது.

**இடபம்:** உற்சாகமாக உழைப்பீர்கள். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எந்தவொரு விடயத்திலும் அவசர முடிவு எடுக்க வேண்டாம். உங்களுக்கு வரவேண்டிய பணம் வீடு தேடி வரும்.

**மிதுனம்:** உறவினர்களுக்கு உதவி செய்து மகிழும் நாள். தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். மனப்பலம் கூடும். பணியிடத்தில் நீங்கள் செய்த நற்செயல்களால் பாராட்டு கிடைக்கும்.

**கடகம்:** உறவினருடன் மனஸ்தாபம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பணிபுரியும் இடத்தில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. வீண்வாதம் செய்யவேண்டாம்.

**சிம்மம்:** உணவு விஷயத்தில் கவனம் செலுத்துவீர்கள். பணியிடத்தில் எதையும் சிந்தித்து செய்வது நல்லது. திட்டமிடாத பயணங்களைத் தள்ளி வைப்பது நன்மை தரும்.

**கன்னி:** சுபநிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். தந்தையின் ஆரோக்கியம் பற்றிய கவலை நீங்கும். இழந்திருந்த உற்சாகத்தை இன்று மீண்டும் பெறுவீர்கள்.

**துலாம்:** உங்களால் தந்தைக்கு பெருமிதம் ஏற்படும். நன்மை அதிகரிக்கும். நண்பர்கள் யார், பகைவர்கள் யார் என்பதை கண்டு விழிப்படைவீர்கள். இன்று எதிலும் யோசித்து செயற்பட வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். மகிழ்ச்சியில் திளைப்பீர்கள். பணம் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக செயற்படுவீர்கள். மீண்டும் பணியிடத்தில் உற்சாகம் கூடும்.

**தனுசு:** பேச்சைக் குறைப்பது நன்மை தரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். மதிப்புக்குரியவர்களின் நட்பைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். பணியிடத்தில் வெற்றியை எதிர்பார்க்கலாம்.

**மகரம்:** வாகனம் ஓட்டும்போது நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அசையா சொத்துக்கள் வாங்குவதை தள்ளி வைப்பது நல்லது. அளவாகப் பேசுவது நன்மை அளிக்கும்.

**கும்பம்:** உடல் ஆரோக்கியத்திலிருந்து வந்த பிரச்சினை தீரும். கொடுக்கல், வாங்கலில் கவனமாக இருக்க வேண்டியநாள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிக்கான ஏற்பாடு தீவிரமாகும்.

**மீனம்:** பேச்சிலும், செயலிலும் கவனமாக இருக்க வேண்டிய நாள். பிறரிடம் குடும்ப ரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். குழந்தைகளுக்கு நன்மை ஏற்படும் நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"உயர்ந்த எண்ணங்களை உடையவர் ஒருநாளும் தனித்தவராகார்" - மகாத்மா காந்தி

## காலம் ஒரு பூமராங்!


உயிர்த்தஞாயிறு தினத் தாக்குதல்கள் இடம்பெற்று இன்றுடன் மூன்று ஆண்டுகள். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுகைக்காக ஒன்றுகூடி இருந்தவர்கள் குருதிச் சகதிக்குள் புதைக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும், அவர்களுக்கு நீதி இன்னும் எட்டாக்கனியாகவே இருக்கின்றது. அதேநேரம், காலம் என்பது பூமராங் போன்று விடுகைப்புள்ளியை திரும்பித்தாக்கும் வலுவான தன்மையுடையது என்பதையும் உயிர்த்தஞாயிறு தினத் தாக்குதல்களில் உயிர்ப்பலி கொள்ளப்பட்டோருக்கான இன்றைய நினைவேந்தல் கட்டியம் செய்கின்றது.

ராஜபக்சக்கள் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு உயிர்த்த ஞாயிறு தின குருதிச் சகதி வலுவான அத்திபாரத்தை அமைத்துக் கொடுத்தது. இந்தத் தாக்குதல்களின் பின்னர், "மைத்திரி – ரணில் ஆட்சிக்காலத்தில் தேசியப் பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டுவிட்டது. தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பலமான சர்வாதிகாரத்தன்மை மிக்க தலைவரொருவர் நாட்டுக்குத் தேவை" என்ற பரப்புரைகள் புயல்வேகம் பெறத் தொடங்கின. 'தேசியப் பாதுகாப்பு' என்பதை அடிப்படையாகக்கொண்டுதான் கோத்தாபய தரப்பினர் ஆட்சியில் அமர்ந்தனர்.

உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள் போன்று வேறெந்தத் தாக்குதல்களும் நடக்காத வகையில் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும், தேசிய சொத்துக்கள் பாதுகாக்கப்படும் என்றெல்லாம் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நம்பியும், அந்த நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பவாத உணர்ச்சிகர அரசியலுக்கு எடுபட்டும்தான் 69 லட்சம் மக்கள் கோத்தாபயவை நாட்டின் ஜனாதிபதியாக்கினர். ஆனால் இன்று இலங்கையின் ரூபாவைப் போன்று கோத்தாபயவும் மதிப்பிழந்துவிட்டார். ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கு கனவிலும் நேர்ந்துவிடக்கூடாத நிலை இன்று கோத்தாபயவுக்கு நேர்ந்திருக்கின்றது. கோத்தாபயவை வீட்டுக்குச் செல்லுமாறும் அரசாங்கத்தை கூண்டோடு பதவி விலகுமாறும் நாளுக்கு நாள் நாட்டின் மூலைமுடுக்கெங்கும் போராட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் போராட்டங்கள் இன்னும் தீவிரத்தன்மையுடன் நகர்வதற்குரிய அனைத்து ஏதுநிலைகளும் இப்போது தென்பட்டிருக்கின்றன.

ரம்புக்கனையில் போராட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இன்னும் சிலர் படுகாயமடைந்திருக்கின்றனர். இந்த அசம்பாவிதத்தை அடுத்து கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் நாட்டில் இரட்டிப்பு வேகம்பெறத் தொடங்கியிருக்கின்றன. அதிலும் உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்ற இன்றைய நாளில் இந்தப் போராட்டங்கள் மேலும் தீவிரமடையத்தான் போகின்றன. பொது அமைப்புக்கள் கட்சிபேதமற்று அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றன. கத்தோலிக்க திருச்சபையும் அரசியல் கட்சிகளும் உயிர்த்தஞாயிறு தாக்குதல்களுக்கு நீதிகோரியும் அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு வலியுறுத்தியும் இன்று பல்வேறு போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன. ஆக மொத்தத்தில் இன்றைய நாள் கோத்தாபய அரசாங்கத்துக்கு ஓர் இருண்ட நாள்.

காலம் ஒரு மர்மப் பொதி. அது வினாக்களையும் விடைகளையும் தன்னகத்தே கொண்ட ஓர் இருண்மைக் குகை. உயிர்த்தஞாயிறு தாக்குதல்களின் சூத்திர தாரிகள் யார்? என்ற மர்மத்தை அது தற்போது அவிழ்த்துக் கொண்டிருக்கின்றது. சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்றுத் துரோகத்தையும் சிங்கள மக்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது செய்த வரலாற்றுத் தவறையும் ஒருசேர இப்போது வெளிப்படுத்துகின்றது.




# இலங்கைக்கு கடன்வழங்க நிலைத்தன்மை அவசியம்!

### சர்வதேச நாணய நிதியம் அறிக்கை

**கொழும்பு, ஏப். 21**

**இலங்கைக்கான எந்தவொரு கடனுக்கும் கடன் நிலைத்தன்மை தேவை. இலங்கைக்கு கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதரகத் தலைவர் மசாஹிரோ நோசாகி தெரிவித்துள்ளார்.**

தற்போது அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை நிதியமைச்சர் அலி சப்ரிக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளருக்கும் இடையில் ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இலங்கையின் தற்போதைய கடன் மற்றும் எதிர்கால பொருளாதார திட்டங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியம் கவனம் செலுத்தி வருகின்றது என்றும் மசாஹிரோ நோசாகி மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# அவசர உதவிகளை வழங்குவதற்கு தயார்

### உலக வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 21

இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. வொஷிங்டனில் இலங்கை நிதியமைச்சர் அலி சப்ரியுடன் நடத்திய பேச்சைத் தொடர்ந்து உலக வங்கியின் துணைத் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் நாட்டில் உறுதித்தன்மை மற்றும் மீட்சியை கட்டியெழுப்புவதற்கும், பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகள் குறித்து வொஷிங்டனில் நிதியமைச்சர் அலி சப்ரியுடன் நடத்திய பேச்சின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீதான நெருக்கடியின் தாக்கம் குறித்து உலக வங்கி ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. எனவே. அத்தியாவசிய மருந்துகள் மற்றும் சுகாதாரம் தொடர்பான பொருள்கள், ஊட்டச்சத்து மற்றும் கல்விக்கு அவசர உதவியை வழங்கத் தயாராக உள்ளது - என்றார். (ம)



## 1,20,000 மெற்றிக் தொன் நிலக்கரி இறக்குமதி

ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் அளவிலான நிலக்கரி அண்மையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இரண்டு கப்பல்களுக்கு 38 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டுள்ளதை அடுத்து, நிலக்கரி தரையிறக்கம் செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, மற்றைய கப்பலில் இருந்து டீசல் மற்றும் விமான எரிபொருள் என்பன தரையிறக்கம் செய்யப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சு-இ)

நாளை 22.04.2022 வெள்ளிக்கிழமை சித்திரை 09
சுபநேரம் : 06.01 - 07.31
ராகுகாலம்: 10.31 - 12.01

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மற்றொரு குடும்பமும் இந்தியாவில் தஞ்சம்

**மன்னார், ஏப்.21**

**இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை அடுத்து, மட்டக்களப்பைச் சேர்ந்த குடும்பமொன்று இந்தியாவில் நேற்றுத் தஞ்சமடைந்துள்ளது.**



இரு சிறுவர்களுடன் பெண் ஒருவர் தனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ளார். தனுஷ்கோடியைச் சென்றடைந்த மூவரையும், மெரைன் பொலிஸார் மீட்டு, தனுஷ்கோடி மெரைன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து இவர்கள் எவ்வாறு தனுஷ்கோடிக்குச் சென்றனர் என்ற விவரம் வெளியாகவில்லை. (க-56)

## கிராம அலுவலர்களின் களப்பணி மட்டுப்பாடு

கொழும்பு, ஏப்.21

தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பை அடுத்து, அலுவலக நாள்கள் மற்றும் களப்பணிகளை மட்டுப்படுத்த இலங்கை கிராம அலுவலர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தால், அரச சேவைகள் அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. திங்கள், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் மாத்திரம் அலுவலகம் மற்றும் களப்பணிகளில் ஈடுபடவுள்ளோம் என்று சங்கம் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் அலுவலகச் செயற்பாடுகளிலும், திங்கட்கிழமைகளில் பொதுமக்கள் தினமாகவும் கடைப்பிடித்து கிராம அலுவலர்கள் பணியாற்றியிருந்தனர்.

அதேவேளை திடீர் மரணங்கள், அனர்த்தங்கள் போன்ற நிலைமைகளில் களப்பணிகள் வழமை போன்று முன்னெடுக்கப்படும் என்று இலங்கை கிராம அலுவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (க-இ)

### மாதாந்தம் ஒருவரின்-

## அடிப்படைத் தேவைக்கு 5,972 ரூபா போதுமாம்!

கொழும்பு, ஏப். 21

மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம் மாவட்ட வாரியாக சமீபத்திய அதிகாரபூர்வ வறுமைக்கோட்டுப் பட்டியலை வெளியிட்டுள்ளது. 2022 பெப்ரவரி மாதத்துக்காக வெளியிடப்பட்ட பட்டியலின்படி, இலங்கையில் உள்ள ஒருவருக்கு தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாதாந்தம் 5 ஆயிரத்து 972 ரூபா போதுமானது என குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய அதிகாரப்பூர்வ தேசிய வறுமைக் கோட்டுப் பட்டியலின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை மாவட்ட வாரியாக மாறுபடும். இந்தப் பட்டியலின் படி ஒருவரின் அதிக வாழ்க்கைச் செலவு கொழும்பு மாவட்டத்தில் உள்ளது. இது 6 ஆயிரத்து 482 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. இந்தப் பட்டியலில் மிகக் குறைந்த மதிப்பு பதுளை மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

இதன்படி, பதுளை மாவட்டத்தில் உள்ள ஒருவருக்கு மாதாந்தம் 5 ஆயிரத்து 623 ரூபா போதுமானது எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## மூன்று மாதங்களுக்கு மருந்துத் தட்டுப்பாடு

கொழும்பு, ஏப்.21

90 நாள்களுக்கு மருந்துத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்று சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து பெறப்படும் நிதியைப் பயன்படுத்தி, தேவையான மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் நாட்டில் தற்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் ஏனைய பொருள்களின் பற்றாக்குறை தொடர்பில், மருத்துவர்கள் கடந்த சில வாரங்களாக எச்சரித்துள்ளதுடன், இதனால் நோயாளிகள் உயிரிழக்க நேரிடும் என்றும் தெரிவித்திருந்தனர்.

அதேவேளை மருந்துகள் மற்றும் இதர பொருள்கள் பற்றாக்குறையை நீக்க இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள பொதுமக்களிடமிருந்து மருத்துவ நிறுவனங்கள் நன்கொடைகளைக் கோரியுள்ளன. (க-இ)



## எரிபொருள்கள் விலையேற்றம் வங்கி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஏப்.21

எரிபொருள்கள் விலை அதிகரிப்பு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு அண்மையில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். "பொருள்களின் விலையேற்றத்தால், வங்கி வலையமைப்புக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டையும், மக்களையும் படுகுழியில் தள்ளிய இந்த அரசாங்கம் உடனடியாகப் பதவிவிலக வேண்டும்" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "ஊழல்களால் உழைத்த பணத்தை மக்களின் உடமையாக்கு, அரச நிறுவனங்களின் விற்பனையை நிறுத்து, வாழ்க்கைச் செலவைக் குறைத்திடு, வெளிநாட்டுப் பண கறுப்புச்சந்தை மாபியாவைத் தடைசெய், விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கு" போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். (க-110)

## கொரோனா முற்றாக நீங்கவில்லை முகக்கவசம் அணிவது கட்டாயம்

### சிறப்பு மருத்துவர்கள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஏப்.21

இலங்கையில் கொரோனாத் தொற்று முற்றாக நீங்கவில்லை. எனவே அனைவரும் பொது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயம் என்று சிறப்பு மருத்துவர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பொது இடங்களில் இனி முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என்று சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது. இது தொடர்பில் சங்கத்தினர் தெரிவிக்கையில், சுகாதார அமைச்சு இந்த அறிவிப்பை மீளப்பெற வேண்டும்.

தனிநபர்களாக பயணம் செய்யும் போது முகக்கவசம் அணிய வேண்டிய அவசியமில்லை எனினும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கொரோனாத் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இன்னும் முற்றாக நீங்கவில்லை. தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ள போதிலும், புதிய கொரோனாத் திரிபுகள் உலகின் பிற பகுதிகளில் பரவி வருகின்றன. இலங்கையிலும் பரவும் அபாயம் சிறிய அளவில் உள்ளது. தற்போது அதிகளவில் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. அதேவேளை தேவையான அளவு பல்வேறு மருந்துகள் மற்றும் நோய் கண்டறிதல் கருவிகளை வழங்க இயலாத நிலைமை காணப்படுகின்றது. எனவே மீண்டும் தொற்றாளர் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டால், நாட்டில் தற்போது நிலவும் குழப்ப நிலை மேலும் அதிகரிக்கும் -என்றனர். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
16.09.1945

இறப்பு
17.04.2022

## அமரர் யோசேப் எட்வேட் இம்மானுவேல்

(ஓய்வுபெற்ற இயந்திரஇயக்குனர்-யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை)

யாழ்ப்பாணத்தினைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி மற்றும் பண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் எட்வேட் இம்மானுவேல் (தாசன்) அவர்கள் கடந்த (17.04.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப்- இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை- திரேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் லூர்த்தம்மா அவர்களின் அன்புக் கணவரும், அன்ரன் (கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்), கலிஸ்ரா (ஜேர்மனி), பிறின்ஸ் (உரிமை யாளர் -தாசன் பாம்), லினேற்றா (ஜேர்மனி), றொபின்சன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், துரைசிங்கம் மற்றும் பூமணி (கனடா), ஜெயமணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் அஞ்சலா (கனடா), றுக்குமணி (ஜேர்மனி), காலஞ்சென்ற இரட்ணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுசிலா, சாயிபாபா (ஜேர்மனி), சுஜி, காலஞ் சென்ற விஜயகுமார் மற்றும் நிசானி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கதிர், லீலா காலஞ்சென்றவர்களான இராஜரெட்ணம், துரைசிங்கம், ராணி மற்றும் நவரட்ணம் (கனடா), காலஞ்சென்றவர்களான சீலன், அந்தோனிப் பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிரோன் (மாணவன் யாழ்.பத்திரி சியார் கல்லூரி), Dr. சயந்திகா- ஸ்ரெபான் (LL.M), Dr. கரோலினா, ஸ்ராலினா (M.Sc), செறோமி (மாணவி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), யஸ்மினி (மாணவி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), றுக்சின், கிறிஸ்ரீனா, டீனா, றொஷ்னா, றொய்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றி இரங்கற்திருப்பலி புனித யுவானியார் ஆலயத்தில் நாளை (22.04.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

117/2, மொறிஸ்லேன், சுண்டுக்குளி.
அன்ரன் (மகன்) : 077 996 7903
பிறின்ஸ் (மகன்) : 077 312 7498

தகவல் :
குடும்பத்தினர்

(CS 19423) (3/6)






# பைத்தியம் பிடித்த நாய்கள்போல பொலிஸார் நடந்துகொள்ள முடியாது!

## மூத்த சட்டத்தரணி விளாசல்

பொலிஸாருக்கு ஆயுதம் கொடுத்த பிறகு பைத்தியம் பிடித்த நாய்களைப் போல நடந்து கொள்ள முடியாது. நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் ஜனாதிபதியின் முறையற்ற நடவடிக்கையின் காரணமாகவே மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று மூத்த சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

துன்பத்தில் இருக்கும் பொதுமக்கள் கட்டுக்கடங்காத வகையில் நடந்து கொண்டாலும் பொலிஸாரால் 'நாய்கள்' போன்று பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முடியாது. கலவரங்களை படிப்படியாகக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். ஒரு கும்பலை ஒரேயடியாகச் சுடுவது [illegible]யாக அதில் ஒன்றல்ல. ரப்பர் தோட்டாக்களைப் பயன்படுத்துவது போன்று கூட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு வேறு வழிகள் உள்ளன.

இந்தத் தாக்குதல் மற்றும் அதன் விளைவுகளுக்கு ஜனாதிபதி, அரசாங்கம், அமைச்சர் மற்றும் பொலிஸாரே பொறுப்பேற்க வேண்டும் -என்றார். (ம)

# 19ஐ நடைமுறைப்படுத்துவதே தற்போதிருக்கும் ஒரே தீர்வு

## மஹிந்த இவ்வாறு தெரிவிப்பு




அரசமைப்பின் பத்தொன்பதாவது திருத்தத்தை அத்தியாவசிய மற்றும் சரியான நேரத்தில் திருத்தங்களுடன் ஜனநாயக ரீதியில் நடைமுறைப்படுத்துவது குறுகிய காலத்தில் மேற்கொள்ளக்கூடிய சாத்தியமான மிகச் சரியான தீர்வாகும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஓர் அரசு தன் மக்களுக்கு ஒருபோதும் மனமுவந்து கஷ்டங்களை ஏற்படுத்தாது. ஆனால் இந்நாட்டு [illegible] என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த நெருக்கடியை சமாளிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தருணம் இது. மக்கள் எம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டை உண்மையாக நேசிப்பவர் யார் என்பதை அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எமது அரசியல் வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு முன், நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

நாட்டில் நிலவும் நெருக்கடியை சமாளிக்க பொருளாதார முகாமைத்துவம் மிகவும் முக்கியமானது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட பல்வேறு சர்வதேச நிறுவனங்களுடன் ஏற்கனவே கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம். அவர்களிடம் இருந்து நல்ல பதில் கிடைத்துவருகிறது. இந்தப் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்குத் தேவை[illegible] ஆதரவை எங்கள் நட்பு நாடுகள் எமக்கு வழங்கி வருகின்றன. பேச்சு மூலம் நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டும். முன்னதாக காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுக்களை கலந்துரையாடலுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தேன். அவர்களின் பெறுமதியான யோசனைகளை எடுத்து தேவையான தலையீடுகளை செய்ய முன்வந்தோம் என்பதை நினைவுபடுத்த வேண்டும்.

அன்றாட வாழ்வில் மணிக்கணக்கில் வரிசையில் காத்திருக்க வேண்டிய வலியை அறிந்து, இந்த நிலையைத் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தை ஒப்புக் கொள்கிறோம். 24 மணி நேரத்துக்குள் தீர்வு கிடைக்காவிட்டாலும், உங்களை இனிமேலும் நாங்கள் வரிசையில் காத்திருக்க வைக்க மாட்டோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதன் முதல் படியாக, அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தத்தை அத்தியாவசிய மற்றும் சரியான நேரத்தில் திருத்தங்களுடன் ஜனநாயக ரீதியில் நடைமுறைப்படுத்துவது குறுகிய காலத்தில் மேற்கொள்ளக்கூடிய சாத்தியமான மிகச் சரியான தீர்வாகும் என்று நம்புகிறேன் -என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரைகுறையாக வீதிப்புனரமைப்பு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை அசமந்தம்

யாழ்ப்பாணம்,ஏப்.21

**மானிப்பாய் - காரைநகர் வீதிப்புனரமைப்பு முழுமையடையாது நிறுத்தப்பட்டுள்ளதால், அந்த வீதியூடான போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் வலி.தென்மேற்குப் பிரதேசசபைத் தவிசாளரால், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கடிதம் அனுப்பப்பட்டபோதும், இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தெரிவிக்கையில்;

மானிப்பாய் - காரைநகர் வீதியின் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. ஆனைக் கோட்டைப் பகுதியிலிருந்து மானிப் பாய் சந்தி வரைக்குமான இடைப் பட்ட பகுதிக்கான புனரமைப்புப் பணிகள் ஒரு மாதத்துக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த வீதியை பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைக்காகப் பயன்படுத்துகின்றனர். எனினும் வீதிப்புனரமைப்பு மந்தகதியில் முன்னெடுக்கப்படுகின்றது. இதனால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மழைகாலங்களில் வீதியிலுள்ள குழிகள் வெள்ளத்தால் நிரம்புவதால், விபத்துக்கள் ஏற்படுகின்றன. இது தொடர்பில் பல தடவைகள் உரியவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். எமது சபையின் வளத்தையும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியையும் பெற்றும் குறித்த வீதியைத் தற்காலிகமாகச் செப்பனிட்டு, தடையற்ற போக்குவரத்தை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (க-125)

# நகை கொள்ளையடித்த மூன்று பேர் கைது

முல்லைத்தீவு,ஏப்.21

தனிமையில் வசித்த வயோதிபர்களைத் தாக்கி, வயோதிபப் பெண்ணின் கழுத்தில் இருந்த முக்கால் பவுண் தாலி கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு - தேவிபுரம் பகுதியில் கடந்த 16 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. கொள்ளையர்கள் வயோதிபப் பெண்ணை கடுமையாகத் தாக்கியதுடன், அவரது கணவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தினர். வயோதிபப் பெண் மஞ்சல் கயிற்றில் முடிந்திருந்த முக்கால் பவுண் தாலியையும் அறுத்துச் சென்றனர்.

தாக்குதலில் காயமடைந்த வயோதிபத் தம்பதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மோப்பநாய்களின் உதவியுடன் தடயவியல் பொலிஸார் மற்றும் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது திம்பிலிப் பகுதியைச் சேர்ந்த மூவரை நேற்றுமுன்தினம் கைது செய்தனர். கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு இளைஞர்களும், இவர்கள் கொள்ளையடிக்கும் நகைகளை விற்பனை செய்துவரும் குடும்பப் பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஏற்கனவே இன்னொரு கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேநபர்களிடம் கொள்ளையிடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் நால்வர் தேடப்படுகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-19)

# கலையரசனின் வாகனம் விபத்து

கொழும்பு,ஏப்.21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளானது.

அம்பாறையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நேற்றுமுன்தினம் கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது குருநாகல் பகுதியில் இந்த விபத்து நடந்துள்ளது.

விபத்தில் நாடாளுமன்ற உறுப்பினரது வாகனமும், பிறிதொரு வாகனமும் சேதமடைந்தன. பெண்ணொருவர் காயமடைந்தார். நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்தபோது விபத்து நடந்ததால், நாடாளுமன்ற உறுப்பினர் பேருந்தில் பயணித்து நாடாளுமன்றம் சென்றுள்ளார். (க-இ)



# அன்னை பூபதிக்கு முன்னணி அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஏப்.21

இந்தியப்படைகளால் நடத்தப்பட்ட தமிழினப் படுகொலையை நிறுத்துமாறு கோரி, உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த அன்னை பூபதிக்கு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அஞ்சலி செலுத்தினர்.

அன்னை பூபதியின் 34 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு, யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளரும், சட்டத்தரணியுமான சுகாஸ், முன்னணியின் மகளிர் அணித்தலைவி வாசுகி சுதாகரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (க-இ)

# உணவு ஒவ்வாமை: 325 பேர் பாதிப்பு

கொழும்பு,ஏப்.21

உணவு ஒவ்வாமை காரணமாக பாதிக்கப்பட்ட 325 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கொக்கல ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஊழியர்கள் நேற்றுக் காலை உட்கொண்ட உணவு ஒவ்வாமை காரணமாக அவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.பாதிக்கப்பட்டவர்கள் கராபிட்டிய போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-இ)

# மணிவண்ணன் குழு பிரான்ஸ் பயணம்

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ். மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையிலான குழுவினர் பிரான்ஸ் நாட்டுக்குப் பயணித்துள்ளனர்.

முதல்வருடன் மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் மற்றும் நல்லூர் பிரதேசசபைத் தவிசாளர் மயூரன் ஆகியோர் பயணித்துள்ளனர். (க-27)

# யாழ்.மத்திய கல்லூரிக்கு நவீன வசதியுடன் பேருந்து

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு, சுமார் 7.6 மில்லியன் ரூபா பெறுமதியான அதி நவீன பேருந்தொன்று நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவர்களால் பேருந்து கையளிக்கப்பட்டுள்ளது.

ஜெஷிமா ரெக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் முகமட் ஜெமில் தலைமையில், பாடசாலையின் அதிபர் கலாநிதி எழில்வேந்தன் முன்னிலையில் பேருந்து கையளிக்கப்பட்டது. (க-20)




# கிளிநொச்சி மாவட்டத்தில் 20,022 ஏக்கரில் சிறுபோகம்

கிளிநொச்சி,ஏப்.21

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை சுமார் 20 ஆயிரத்து 22 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.மாவட்ட விவசாய குழுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குளங்களும் கடந்த மழையால் போதியளவு நீர் கொள்ளளவைக் கொண்டுள்ளதால், சிறுபோகத்தை சிறந்த முறையில் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி. கேதீஸ்வரன், தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், விவசாயத் திணைக்களத்தினர் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிமுகத்திடல் போராட்டத்தில் தெளிவான இலக்கு கிடையாது

## தமிழர்கள் ஆதரவளிக்க வேண்டுமா? யாழ். பல்கலை பேராசிரியர் கேள்வி

**யாழ்ப்பாணம், ஏப். 21**

**அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் இடம்பெறுகின்ற போராட்டத்தில் தெளிவான இலக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இதற்கு தமிழ் மக்கள் ஆதரவு தெரிவிக்க வேண்டுமா என்று சிந்திக்க வேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்துறை பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

காலிமுகத்திடலில் இடம்பெறுகின்ற போராட்டம் ஆட்சி மாற்றத்தை இலக்காகக் கொண்டுள்ளது. இதில் தமிழர்களும் இணைந்து செயல்பட வேண்டுமா என்ற கேள்வி அனைவரது மத்தியிலும் எழுந்துள்ளது. ஒரு போராட்டம் நிகழ்த்தப்படுகின்ற போது, ஒரு தேசிய இனமாக தமிழர்களை அடையாளப்படுத்த வேண்டும். அத்தகைய ஒரு இலக்கு இதில் இல்லை.

இலங்கையின் இனப்பிரச்சினையும், நீண்டகால போரும், போருக்குப் பின்னரான அணுகுமுறையும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பிரதானமான காரணமாகக் காணப்படுகின்றது.

இந்தப் போராட்டத்தில் தமிழர்கள் தொடர்ச்சியாக எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை, அதனோடு இணைந்து தற்காலத்தில் எழுந்துள்ள சமூக, பொருளாதார பிரச்சினைகளில் இருந்தும் விடுபடுவதற்கான உத்திகளை முதன்மைப் படுத்துவது அவசியம்.

தனித்து ஜனாதிபதியையோ, ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தையோ நீக்குவதால் தமிழர்களுக்குரிய அரசியல் இருப்பில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது.

காலிமுகத்திடல் போராட்டம் முழுக்க முழுக்க தமிழர்களின் அதாவது ஈழத் தமிழர்களின் இருப்பை மட்டுமல்ல ஒட்டுமொத்தமான இலங்கையின் அரசியல் இருப்பையும், அதனுடைய கட்டமைப்பையும் ஒரு புதிய நிலைக்கு முற்றாக ஈடுபடுத்திக் கொள்ளுமாக இருந்தால் அதனை நோக்கிப் பயணிப்பதில் தவறில்லை. நிச்சயமாக இலங்கையின் அதிகாரக் கட்டமைப்பு மாற்றப்பட வேண்டும். அது அனைத்து இனத்தவரையும் சம அங்கீகாரம் உடையவராக மாற்ற வேண்டும் -என்றார். (க-125)

# காலிமுகத்திடல் போராட்டத்தால் நிரந்தர அரசியல்தீர்வு வேண்டும்

## ஆர்ப்பாட்டக்காரர்களிடம் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 21

அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டத்தில், நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற முதன்மைக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த நாட்டில் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டதும், அதன் காரணமாக ஏற்பட்ட போருமே பொருளாதார வீழ்ச்சிக்கு முதல் காரணம். ராஜபக்ச குடும்பம் வீட்டுக்குச் செல்லவேண்டும் என்று சிங்கள இளைஞர்கள், 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து காலிமுகத் திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எமது நாடு பொருளாதார ரீதியாக மிகவும் அதல பாதாளத்துக்குள் இன்று விழுந்து கிடக்கின்றது. தற்போது இருக்கும் பொருளாதார நிலைமையை எவர் ஆட்சிக்கு வந்தாலும் உடனடியாக நிவர்த்தி செய்ய முடியாது. பண்டா- செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோது ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட்டிருந்தால், இந்த நாட்டில் போர் இடம்பெற்றிருக்காது. போருக்காக மாறிமாறி வந்த அரசாங்கங்கள் டொலரை செலவழித்திருக்க வேண்டிய தேவையும் இருந்திருக்காது. தற்போது நடைபெறுகின்ற இந்தப் போராட்டத்தை தமிழர்களாகிய நாங்கள் எப்படிப் பயன்படுத்தப் போகின்றோம் என்பது பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சொந்தங்கள் வடக்கு, கிழக்கில் இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றனர். அந்தப் போராட்டத்தில் எமது தமிழ் இளைஞர்களின் பங்கு என்ன? எமது தமிழ் இளைஞர்கள் காலி முகத்திடல் போராட்டத்தில் பங்கு கொள்ளவேண்டும் என எங்கள் மக்களின் பிரதிநிதிகளே அறைகூவல் விடுக்கின்றனர். இவ்வாறு அறைகூவல் விடுபவர்கள் எமது உறவுகளின் போராட்டத்தில் இளைஞர்களை உள்வாங்குவதற்கு எவ்வித அக்கறையும் அற்றவர்களாகவே செயற்பட்டிருக்கின்றார்கள் -என்றார். (க-இ)

# அரசுக்கு அதிர்ச்சி கொடுத்த மூன்று முஸ்லிம் எம்.பிக்கள்!

கொழும்பு, ஏப்.21

நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், எம்.எஸ்.தௌபீக் மற்றும் இஷாக் ரகுமான் ஆகிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதில் இருந்து விலகிக் கொண்டுள்ளனர்.

மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் இனி அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கமாட்டார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற அரசாங்கத்துக்கு ஆதரவை வழங்கியதுடன் அதன் பின்னர் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றியிருந்தனர். (எ-இ)

பொருளாதார நெருக்கடிக்கு

# புதிய அமைச்சரவை தீர்வாக அமையாது!

## முன்னாள் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21


ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள, புதிய அமைச்சரவையை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு இது தீர்வு அல்ல என்று முன்னாள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். புதிய அமைச்சரவைக்கு எனது வாழ்த்துக்கள். பொதுமக்கள் கடும் சுமையுடன் இருப்பதால், புதிய அமைச்சர்களாவது மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வை காண்பதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தங்கள் திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# பிரதம கொறடாவாக அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, ஏப். 21

அரசாங்கத்தின் ஆளும் கட்சி பிரதம கொறடாவாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கடந்த திங்கட்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)


## மரண அறிவித்தல்



**கமலராஜ் தர்மராசா**

யாழ். நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் AARAUஐ வதிவிடமாகவும் கொண்ட கமலராஜ் தர்மராசா அவர்கள் கடந்த (13.04.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தர்மராசா கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், கணேசபிள்ளை பத்மாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், பிறேமினாவின் அன்புக் கணவரும், அதியா, ஆதீஸ் அவர்களின் அன்புத் தந்தையும், கஜனி, காந்தராஷ், தமிழினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ராஜேந்திரன், சிவதீசன், டில்சன், கஜமுகன், தர்சிகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2022) வெள்ளிக்கிழமை 9.00 மணி (இலங்கை நேரம் நண்பகல் 12.30 மணிக்கு) சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,நீர்வேலி, குறுக்குறோட். (CS 19431) (4/6) தகவல்
தந்தை:- 077 976 9587, சகோதரன்:- 0039 320 944 5100 குடும்பத்தினர்.


# தமிழர்களின் கோரிக்கைகளை ஆதரிப்போருடன் இணையலாம்

## வேலன் சுவாமிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கைகளை ஏற்று அதற்கு ஆதரவு தெரிவிப்பார்களாயின், காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் தமிழர்களும் இணையலாம் என்று சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டம் பொருளாதார நெருக்கடிகளால் உருவாகியுள்ளது. கொழும்பில் இருக்கக்கூடிய நடுத்தர வர்க்கத்தினர் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுவீதிக்கு இறங்கியுள்ளனர். இவர்களுடைய பிரச்சினை வேறு. தமிழர்களுடைய பிரச்சினை வேறு. வடக்குகிழக்கு தாயகத்தில் எமது மக்கள் போராடி வரும் சவால்களை எதிர்கொண்டனர். அதன்விளைவாக பல்வேறு கோரிக்கைகளுடன் இன்றும் போராடி வருகின்றனர். இனப்படுகொலையாளிகளை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி அதற்கான ஒரு பரிகாரமாக, நீதியாக பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்பது தமிழர் தரப்பின் பிரதானமான ஒரு கோரிக்கையாக அமைகின்றது. இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்பவர்களுடன் இணைந்து போராடலாம் -என்றார். (க-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியா மாவட்ட கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்பள்ளி மாணவர்களின் கலை திறமையை மேம்படுத்தும் முகமாக 'சிறுவர் பாடல்' எனும் நிகழ்வு சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க பாலர் பாடசாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஜே.தாட்சாயினி தலைமையில் இடம்பெற்றது. (ய-110)

# கால்கோள் விழா



கொடிகாமம்- திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையில் கால்கோள் விழா அதிபர் க.மகிந்தன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ய-159)



மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் கால்கோள் விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வித்தியாலய அதிபர் வே.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. (ய-9)



யாழ். வட்டுக்கோட்டை மேற்கு அ.மி.த.க. பாடசாலையில் கால்கோள் விழா அதிபர் பொ.சிவரஞ்சன் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ய)




போக்கட்டி அ.த.க. பாடசாலையில் கால்கோள் விழா நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (ய-159)

# மணிவிழா

தென்மராட்சி ஏப்.21

நாவற்குழி மகா வித்தியாலயத்தின் அதிபர் சின்னத்தம்பி பவளகுமாரனின் மணிவிழா நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதான மண்டபத்தில் பிரதி அதிபர் த.மகாதேவன் தலைமையில் இடம்பெற்றது.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம், பழைய மாணவர் சங்கம், புலம் பெயர் பழைய மாணவர் சங்கங்கள், தென்மராட்சிக் கல்வி வலயம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், விரிவுரையாளர்கள், கல்விச் சமூகங்கள், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் சனசமூக நிலையத்தினர் உட்பட பலர் விழா நாயகருக்கு மலர்மாலை, சந்தனமாலை, அணிவித்து பொன்னாடை போர்த்தி வாழ்த்து மடல்கள், நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். (ய-159)





பளை- தர்மக்கேணி அ.த.க.பாடசாலையில் ஆரம்பப் பிரிவில் கற்று இடைநிலைக் கல்விக்காக வேறு பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை மதிப்பளித்து வழியனுப்பும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் அதிபர் வே. செல்வகுமார் தலைமையில் கடந்த 18ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. (ய-9)





யாழ். சுழிபுரம் நாவலர் சனசமூக நிலையத்தின் வருடப் பிறப்பு விழா கடந்த 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் நாவலர் திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.
நாவலர் சனசமூக நிலையத்தின் தலைவர் இ.காந்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், புலமைப்பரிசில், க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர்தரம் ஆகியவற்றில் சித்தியடைந்த மாணவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ய-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கு உக்ரைனில் ரஷ்யா தீவிர தாக்குதல்

கீவ், ஏப்.21
உக்ரைனின் கிழக்குப் பகுதியைக் கைப்பற்றுவதற்கான தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டுவிட்டதாகக் கூறப்படும் மரியுபோல் நகரின் தெற்கில் இருந்து நீளும் லுஹான்ஸ்க், டொனெட்ஸ்க் ஆகிய முக்கிய கிழக்குப் பகுதிகளைக் கைப்பற்ற ரஷ்யா குறிவைத்துள்ளது.

இதனிடையே லிவீவ் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 11 பேர் வரையில் காயமடைந்துள்ளனர் எனவும் லிவீவ் நகர மேயர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி தெரிவிக்கையில்;

உக்ரைன் தலைநகர் கீவ்வை ரஷ்யாவால் இன்னும் கைப்பற்ற முடியவில்லை. இதனால் தனது போர் வியூகத்தை ரஷ்யா மாற்றியமைத்துள்ளது. இதனால் இரண்டாவது கட்டப்போர் தொடங்கிவிட்டது. ரஷ்யப் படைகளை எங்கு குவித்தாலும் எங்களுக்குக் கவலையில்லை. நாங்கள் அவற்றை எதிர்த்துப் போரிடுவோம்- என்றார்.

(ச-இ)

## உக்ரைனுக்கு ஜப்பான் உதவி

கீவ், ஏப்.21
உக்ரைனை ரஷ்யா தொடர்ந்து தாக்கிவரும் நிலையில் உக்ரைனுக்கு உதவ ஜப்பான் முன்வந்துள்ளது.

உக்ரைன் - ரஷ்யா போர் 2 மாதங்களைக் கடந்து இடம் பெற்றுவருகிறது. இந்நிலையில் உக்ரைனுக்கு பாதுகாப்பு கவசஉடைகள், முகக்கவசங்கள் மற்றும் ட்ரோன்களை வழங்க ஜப்பான் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ச-இ)


## வலி கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம். (வ.து) அச்சுவேலி

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல் - 23.04.2022 சனிக்கிழமை

எமது சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 23.04.2022ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. ஏற்கனவே (03.04.2022ந் திகதி கிளைப் பொதுச் கூட்டத்திற்கு சமூகமளிப்பதற்கு தனித்தனி அழைப்பு கடிதம் உரிய கிளைகளுக்கான தவிசாளர்களினால் தபால் மூலம் (வாக்காளர் பட்டியலில் உள்ள முகவரியின் படி) அனுப்பி வைக்கப்பட்டு அன்றைய தினம் ஊரடங்கு சட்டம் காரணமாக கூட்டம் நடைபெறவில்லை . 05.04.2022திகதிய உதயன் பத்திரிகையில் பொது அறிவித்தல் ஊடாக (09.04.2022ல் கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் என விளம்பரப்படுத்தப்பட்டு 26 கிளைகளிலும் நடைபெற்ற போதிலும் அதில் 24 கிளைகளில் மாத்திரமே கிளைக்குழு தெரிவு நடைபெற்றது இரு கிளைகளில் நிறைவெண் போதாமையால் கூட்டம் நடைபெறவில்லை.எனவே நடைபெறாத இரு கிளைகளுக்கும் மீண்டும் சந்தர்ப்பம் வழங்குவதற்காக எதிர்வரும் 23.04.2022 ம் திகதி சனிக்கிழமை கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் எனவும் கிளைப்பொதுச்சபை கூட்டத்திற்கு சமூகமளிக்க தகைமையுள்ள அனைத்து அங்கத்தவர்களுக்கும் (காட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்கள்) உரிய அழைப்பு கிடைக்கப்பெறாது விடினும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் கிளைப்பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கிளைக்குழு தெரிவு நடவடிக்கைக்கு ஒத்துழைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

### கிளை பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

| இல | கிளை. இல | கிளை பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 06 | வளலாய் மேற்கு | வளலாய் மேற்கு பாரதி சனசமூக நிலையம் | திரு.கு.வேணுகோபு |
| 02 | 18 | கதிரிப்பாய் | கதிரிப்பாய் ஸ்ரீசுப்பிரமணியம் சனசமூக நிலையம் | திரு.ம.நிசாந்தன் |

செயலாளர்
வலி கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) அச்சுவேலி.
21.04.2022



## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும்

எதிர்வரும் (24.04.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற இருந்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும். புதிய நிர்வாகக்குழுத் தெரிவும் (15.05.2022) ஞாயிற்றுக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

**இடம்** :- சபாலிங்கம் அரங்கு. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
**காலம்** :- 15.05.2022 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்** :- காலை 9.00 மணி

புதிய நிர்வாகக் குழுவுக்கான நியமனப் பத்திரங்களை புதிதாகக் கோரும்படி பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் எம்மை எழுத்து மூலம் கோரியதன் காரணமாக. தேர்தல் குழுவின் தீர்மானத்திற்கமைய பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டு புதிய திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

**நியமனப்பத்திரம் தொடர்பான விபரங்களை பழைய மாணவர் சங்க (www.jhcobajaffna.com) இணையத்தளத்தில் பார்வையிடலாம்.**

(CR 8292) (4/6)

செயலாளர்
பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி



## மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 09 . 1978

இறப்பு 02 . 03 . 2022



### சூசைமரியதாஸ் ஜெசிந்தா

குருநகரைப் பிறப்பிடமாகவும் உதயபுரம் 4ம் குறுக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சூசை மரியதாஸ் ஜெசிந்தா அகாலமரணமானார்.

அன்னார் சூசைமரியதாஸ் ஜெனோவா. காலஞ்சென்ற ஆசீர்வாதம் சூசைமரியதாஸ் ஆகியோரின் அன்பு மகளும் ஜேக்கப் ஆசீர்வாதம். ஆசீர்வாதம் செபமாலை (மணி). பேதுருவஸ்தியாம்பிள்ளை.வஸ்தியாம்பிள்ளை மரியம்மா. ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். ஆசீர்வாதம் வின்சென்மரியதாஸ் (சின்ராசா ) வின் பெறாமகளும். தனுயனின் அன்புத் தாயாரும். சூசைமரியதாஸ் சந்திரகுமார் (ஜேர்மனி ) அவர்களின் அன்புச் சகோதரியும் சந்திரகுமாரன் றமணி (ஜேர்மனி) யின் அன்பு மைத்துனியும். சந்திரகுமாரன் சாம்சன் (ஜேர்மனி). சந்திரகுமாரன் சபினா (ஜேர்மனி). சந்திரகுமாரன் கீசெலா (ஜேர்மனி). ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் உதயபுரம் 4ம் குறுக்கில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து நாளை (22.04.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துசெல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு. புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் குறுக்குத்தெரு,
உதயபுரம்.

தகவல்
சந்திரகுமாரன் (சகோதரன்)

(cs 993)(2.6)



## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 06 - 1947

மறைவு 05 - 02 - 2021



அமரர்
### விசுவலிங்கம் கந்தசாமி

ஆண்டொன்று கழிந்தது அப்பா - இன்று
ஆனாலும் உங்கள் நினைவுகள் அழியவில்லை
அருமையான உமது திருமுகத்தை மீண்டும்
அன்புடன் காண்பதற்கு தவிக்கின்றோம்.

(CS 19426) (4/6)

கல்வயல், சாவகச்சேரி.
076 791 9746, 077 881 3330

நினைவுகளுடன்
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்



### தெய்வேந்திரம் ரஜீவ்

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் அரை ஏக்கர் சிவநகர் ஒட்டுசுட்டானை வதிவிடமாகவும் கொண்ட நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை ஒட்டுசுட்டான் பணியாளருமான தெய்வேந்திரம் ரஜீவ் அவர்கள் நேற்று அதிகாலை (20.04.2022) புதன்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகராசா தெய்வேந்திரம் மற்றும் புனிதவதி தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்ற எதிர்மன்னசிங்கம் மற்றும் லூத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். றெயின்பிருந்தாவின் அன்புக் கணவரும். தமிழ்ச்செல்வன். பிறையாளன். சர்வினி ஆகியோரின் பாசமிகு தந்தையும். ரஜிதீபா. சஞ்சீவ். பிரதீப். சஞ்ஜீபா ஆகியோரின் இணைபிரியாத மூத்த சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2022) வியாழக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அரை ஏக்கர் சிவநகர் ஒட்டுசுட்டானில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

(CS ) (4/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
23 · 07 · 1953

மறைவு
01 · 05 · 2021

## அமரர் திருமதி நாகேஸ்வரி துரைராசா

ஓராண்டு நீங்கினாலும் நம்மை விட்டு
நீங்காது உங்கள் நினைவு!
அன்பினால் எங்கள் அனைவரதும்
உள்ளங்களில் குடியிருக்கும்
எங்கள் குடும்பத்தின் ஆணிவேரை
நாம் என்றென்றும் நினைத்திருப்போம்!
தெய்வத்தால் தரப்பட்ட தெய்வம் நீங்கள்
என்றதனால் எமது உள்ளங்களில்
சாகாவரம் பெற்று வாழ்கின்றீர்கள் அம்மா!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(CS 44171) (2/6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
26 - 04 - 1933



மறைவு
20 - 04 - 2022

## திருமதி கணேசமூர்த்தி சிவசிதம்பரம்

(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை, அளவெட்டி)

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசமூர்த்தி சிவசிதம்பரம் நேற்று (20.04.2022) புதன்கிழமை காலை அளவெட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லப்பா வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மருமகளும், செல்லப்பா கணேசமூர்த்தி அவர்களின் பாசமிகு மனைவியும், நந்தினி (லண்டன்), சாந்தினி (பிரான்ஸ்), நந்தகுமாரன் (நந்தன்-பிரான்ஸ்), திருமகள் (அமரர்), பிரணவன் (அமரர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராமசாமி (அமரர்), பரமசாமி (அமரர்), குமாரசாமி (அமரர்), கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமலதாஸ், அருணகிரிநாதன் ஆகியோரின் மாமியாரும், பைரவி, ரமணா, அலிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

(CS 19427) (4/6)

தொடர்புகளுக்கு
0094 21 205 9637, நந்தினி:- 0044 740 464 7519
சாந்தினி:- 0033 771 747 391, நந்தன்:- 0033 603 481 213

தகவல்:
குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 22.03.2022 செவ்வாய்க்கிழமை
இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி

## அமரர் சங்கரப்பிள்ளை சின்னம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (21.04.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது துயரில் கலந்து கொண்டு தொலைபேசி ஊடாகவும், நேரில் வந்தும் ஆறுதல் கூறியவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலர்வு
26.04.1936

உதிர்வு
22.03.2022

குடும்பத்தினர்
கைதடி கிழக்கு,
கைதடி

(CR 37874) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரச்சினையைத்...

அந்த அறிக்கையில் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கா விட்டால் பௌத்த மகா சங்க ஆணையை பிரகடனப்படுத்த வேண்டி ஏற்படும் என்று அவை எச்சரிக்கை விடுத்துள்ளன. மகா சங்க ஆணை என்பது, பௌத்தர்கள் மத்தியில் அதி மரியாதைக்குரியது என்பதாலும், இறுதி அஸ்திரமாகவே அந்த வழக்கம் உபயோகப் படுத்தப்படுவதாலும் மகா சங்கத்தினரின் இந்த அறிவிப்பு தெற்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பௌத்த பீட மகாநாயக்கர்கள் நேற்று வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை, நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினையைத் தீர்க்க எந்த வகையிலும் உதவாது. ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், ஏனைய கட்சிகளின் தலைவர்கள் இணைந்து தங்களது யோசனைத் திட்டத்தை உடனடியாக முன்வைக்கவேண்டும்.

20ஆவது திருத்தத்தை நீக்கி, 19ஆவது திருத்தச் சட்டம் மீளக் கொண்டுவரப்பட வேண்டும் . இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடிக்கு நாட்டை ஆண்ட அனைத்து அரசாங்கங்களுமே காரணம்.

அமைச்சர்களும், அதிகாரிகளும் எந்த வரப்பிரசாதங்களையும் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. போராட்டங்களைக் கட்டுப்படுத்த பலத்தைப் பிரயோகத்தில் இருந்து அரசாங்கம் விலகி நிற்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசாங்கம் தவறுமானால், பௌத்த மகா சங்க ஆணையைப் பிரகடனப்படுத்துவோம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த மகா சங்க ஆணை என்பது மகாசங்கத்தினரால் வெளியிடப்படும் ஒரு அறிவிப்பாகும். அதற்கு மதிப்பளிக்க வேண்டும் என்பது பண்டைய காலம் தொட்டு பௌத்தர்கள் மத்தியில் இருக்கும் வழக்கமாகும். மன்னராட்சிக் காலம் முதல் பௌத்தர்கள் மத்தியில் உள்ள இந்த நடைமுறையானது, ஏதேனும் ஒரு விடயத்துக்கு தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்படும் இறுதி அஸ்திரம் என்றே கருதப்படுகின்றது. இந்தப் பௌத்த சாசனத்தை மீறுவோரை மகா சங்கங்கள் முற்றிலும் ஒதுக்கி வைக்கும் அறிவித்தலை விடுக்கும் என்றும், அதனால் அவர்கள் பௌத்தர்களாக இருக்கத் தகுதியற்றவர் என்று கருதப்படுவதால், பல்வேறுபட்ட நெருக்கடிகளைச் சந்திப்பர் என்றும் கூறப்படுகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பௌத்த மகாசங்க ஆணை இதுவரை பிரகடனப்படுத்தப்பட்டதில்லை. இந்த நிலையில் முதல்முறையாக இப்போது அந்த ஆணையைப் பிரகடனப்படுத்தப் போவதாக மகாநாயக்கர்கள் வெளியிட்டுள்ள எச்சரிக்கை தென்னிலங்கையில் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியுள்ளது. (அ-எ-44)

## கோத்தாபய....

சபையில் நேற்றுக் கடும் சொற்போர் மூண்டது. இருவரும் சரமாரியாக விமர்சனக் கணைகளைத் தொடுத்தனர்.

ஒரு கட்டத்தில் கடுப்பான எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகரை 'பச்சைப் பொய்யன்' என விமர்சித்தார்.

"கட்சித் தலைவர்கள் இணைந்து கோரிக்கை விடுத்தால் பதவி விலக நான் தயார்" என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நேற்று சபையில் அறிவித்தார்.

இது தொடர்பான தகவல் அனைத்து ஊடகங்களிலும் காட்டு தீ போல் பரவியது. சர்வதேச ஊடகங்கள்கூட அதைப் பிரதான செய்தியாக வெளியிட்டிருந்தன.

அதையடுத்து தான் அவ்வாறு குறிப்பிடவில்லை எனவும், தனது அறிவித்தலை எதிர்க்கட்சித் தலைவர் தவறாக அர்த்தப்படுத்தியுள்ளார் எனவும் சபாநாயகர் சபைக்கு தெரியப்படுத்தினார். அதனால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கடுப்பானார்.

"சபாநாயகரே, கட்சித் தலைவர்கள் கூட்டமொன்றின்போது நீங்கள் அவ்வாறு அறிவித்தீர்கள். தற்போது இல்லையென மறுக்கின்றீர்கள். நீங்கள் சொல்வதில் உண்மை இல்லை என்பதை மட்டும் என்னால் தெளிவாகக் குறிப்பிட முடியும்." என்று சஜித் சீற்றத்துடன் பதிலளித்தார்.

அப்போது குறுக்கீடு செய்த சபாநாயகர், "நீங்கள் சொல்வதுதான் பொய், தவறான அர்த்தப்படுத்தலை வழங்கிவிட்டீர்கள். 113 பேரின் ஆதரவு இருந்தால், ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பை ஜனாதிபதி வழங்குவார் என்றுதான் குறிப்பிட்டிருந்தார். 113 பேரின் ஆதரவு இருந்தால் அதனை நிரூபித்து ஆட்சியைப் பொறுப்பெடுங்கள்" என்று குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர், "நீங்கள் சொன்னதைத்தான் நான் சபையில் சொன்னேன், தவறான அர்த்தப்படுத்தலை வழங்கவில்லை. அப்படியானால் நீங்கள் கூறியதில் தவறு இருந்திருக்கலாம். எனது பக்கத்தில் தவறில்லை. நான் பொய்யுரைக்கின்றேனா? சபாநாயகரே, பச்சையாக பொய்யுரைக்க வேண்டாம். நீங்கள் சபாநாயகர் அல்லர், பொய்யர் " எனக் கடுந்தொனியில் குறிப்பிட்டார்.

அதையடுத்து சபாநாயகரும் கடுப்பானார். "நீர் பதவிக்கு மதிப்பளியும், நான் அவ்வாறு குறிப்பிடவில்லை" என எதிர்க்கட்சித் தலைவரை நோக்கித் தெரிவித்தார்.

"எனக்கு பொய்யுரைக்க வேண்டிய தேவை கிடையாது. ஜனாதிபதி பதவி விலகுவார் என நீங்கள் குறிப்பிட்டீர்கள். எனது அறிவிப்பை நான் மீளப்பெறமாட்டேன்." என சஜித் மீண்டும் அறிவித்தார்.

"ஜனாதிபதியைப் பதவி விலகுங்கள் என்று நாடாளுமன்றத்தால் கோர முடியாது. 113 பேரின் ஆதரவு இருந்தால் ஆட்சி கையளிக்கப்படும் என்றுதான் கூறினேன்" என்று சபாநாயகரும் பதிலளித்தார். (அ-எ-44)

## தமிழருக்கு...

விடுத்துள்ளது.

இது தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கடந்த 15ஆம் திகதியன்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிங்கள அரசாங்கங்கள் எவையும் தமிழ் மக்களை பாரபட்சமின்றி நீதியாக நடத்தப் போவதில்லை. இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வழிமுறைகளிலும் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவார்கள். இந்தநிலையில் நேரடி உதவிப்பொறிமுறை உருவாகும் நிலை தோன்றின் புலம்பெயர் தமிழ் மக்கள், தமிழக மக்கள், உலகத் தமிழ் மக்கள் இணைந்து ஈழத்தமிழ் மக்களை நெருக்கடியில் இருந்து காப்பாற்ற முடியும்.

இலங்கையில் தமிழ்மக்கள் மீதான சிங்கள அரசாங்கங்களின் இன அழிப்புப் போரும், பெரும் இராணுவச் செலவினங்களும், தவறான கொள்கைளும், ஊழல் நிறைந்த நிர்வாகமும், கொரோனா உலகப் பெருந்தொற்று உருவாக்கிய தாக்கங்களும் இணைந்தே பொருளாதார நெருக்கடியை உருவாக்கியுள்ளன.

ஈழத்தமிழர் தேசம் சிங்களப் பேரினவாத அரசால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நிலையில், இந்தப் பொருளாதார நெருக்கடி, இன அழிப்புப் போரால் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இரட்டைச் சுமையாக அமைந்துள்ளது.

ஈழத் தமிழ் மக்களுக்கான ஒரு நேரடி உதவிப்பொறிமுறையை உருவாக்கும் முயற்சிக்குத் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்க வேண்டும். இந்த முயற்சியைக் காலதாமதம் இன்றி ஆரம்பிப்பது ஈழத் தமிழர்களுக்குப் பெரும் நம்பிக்கையைத் தரும்.

தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பில் தமிழ் மக்களின் உண்மை நிலைமையைக் கண்டறிவதற்கான குழு ஒன்றை இலங்கைக்கு உடன் அனுப்பி வைப்பதும் இந்த முயற்சிக்கு வலுச் சேர்க்கும். நேரடி உதவிப் பொறிமுறை ஊடாக ஈழத் தமிழ் மக்களுக்கு அனுப்பி வைக்கும் முயற்சியில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது பங்களிப்பை வழங்கும் - என்றுள்ளது. (அ-எ-இ)

## வீடு புகுந்து...

இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 3மணியளவில் நடந்துள்ளது. வீட்டுக்குள் புகுந்த இருவர், வீட்டில் இருந்தவர்களை தாக்கி அச்சுறுத்தி மூன்றரைப் பவுண் நகைகளைக் கொள்ளையடித்திருந்தனர். கொள்ளையர்களின் தாக்குதலில் பெண் ஒருவர் காயமடைந்த நிலையில், அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் முதன்மைப் பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரான்ஸிஸ் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் குப்பிளானைச் சேர்ந்த 23 மற்றும் 33 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, கொள்ளையிடப்பட்ட நகைகள் சுன்னாகத்தில் அடகு வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-எ-26)

## பளை விபத்தில்...

ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பளை, இந்திராபுரத்தைச் சேர்ந்த ஜோன்சன் நிரோசன் (வயது-25) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். இவர் ஒரு மாற்றுத் திறனாளி என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி, இரணைமடுவில் உள்ள வீட்டுக்குச் சென்றுவிட்டு, நேற்றுக் காலை தந்தையுடன் இந்திராபுரத்துக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பியபோது, வாகனம் ஒன்றுடன் மோட்டார்சைக்கிள் மோதியதிலேயே இந்த விபத்து நடந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த இளைஞரின் உடல் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவரது தந்தையான 55 வயதுடைய சொலமன் ஜோன்சன் விபத்தில் காயமடைந்த நிலையில், கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-9)

## வீடு உடைத்து...

நகைகள் திருடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நடந்துள்ளது. வீட்டில் இருந்தவர்கள் உறவினர் வீடொன்றுக்குச் சென்ற சமயமே, அவர்களின் வீடு உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த நகைகள் திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-26)

## கட்டுக்கட்டாக...

இரு தினங்களில் இலங்கை மத்திய வங்கி 19.6 பில்லியன் ரூபாவை அச்சிட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கிய பின்னர் இலங்கை மத்திய வங்கி வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் நாணயத்தாள்களை அச்சிட்டு வருகின்றது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தமைக்கு தொடர்ச்சியாக நாணயத்தாள்களை அச்சிட்டு வெளியிட்டமையும் ஒரு காரணம் என்று சர்வதேச நாணய நிதியம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## அரசுக்கு...

பொலிஸாரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட ரம்புக்கனைப் பிரதேசத்திலும், ஊரடங்குச் சட்டத்தை மீறி மக்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தங்காலை இல்லம், பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக்க இல்லம் என்பன நேற்று மக்களால் முற்றுகையிடப்பட்டு, ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதேநேரம் கொழும்பு காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்படும் போராட்டம் நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலக வேண்டும் என்ற கோஷத்துடன் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுதவிர நாடு முழுவதும் பல இடங்களில் வீதிகளை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். வீதிகளில் தடைகளை ஏற்படுத்தியும், ரயர்களைத் தீயிட்டு எரித்தும் அவர்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனால் பல இடங்களில் போக்குவரத்துத் தடைப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பேற்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று நாட்டு மக்கள் வலியுறுத்தி வரும் நிலையில், ஜனாதிபதியும், ஏனையோரும் பதவி விலக மறுத்து வருகின்றனர். அதனால் நாளுக்கு நாள் நாட்டில் போராட்டங்கள் தீவிரம் பெற்று வருகின்றன. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரம்புக்கனையில் பொலிஸார் அராஜகம் தலவாக்கலையில் திரண்ட இளைஞர்கள்



ஹற்றன், ஏப்.21
ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலுக்கும் கடும் கண்டனம் தெரிவித்து, தலவாக்கலையில் நேற்று ஒன்றுதிரண்ட இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என்று போராட்டத்தில் பங்கேற்ற இளைஞர்கள் வலியுறுத்தினர். முச்சக்கரவண்டி களின் சாரதிகளும் அணிதிரண்டு பேராதரவை வழங்கினர்.
தலவாக்கலை - லிந்துலை நகர சபைக்கு அருகில் இருந்து ஹற்றன் சுற்றுவட்டத்துக்கு பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாகச் சென்றனர். அங்கு சாலை மறியல் போராட்டத்தையும் முன்னெடுத்தனர். இதனால் பிரதான வீதிகளின் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது.
எரிபொருள் விலையேற்றம், அத்தியாவசியப் பொருள்களின் தொடர் விலையேற்றம் ஆகியவற்றுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்துக்கும் ஆதரவு தெரிவித்தனர். (க-இ)

## குருதிக்கறை ஆடையுடன் எதிர்க்கட்சி எம்.பிக்கள்!

கொழும்பு, ஏப். 21
ரம்புக்கனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக நாடாளுமன்றின் நேற்றைய அமர்வில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குருதிக்கறை படிந்த ஆடையுடன் எதிர்ப்பில் ஈடுபட்டார்கள்.
இரத்த வெறி வேண்டாம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்திலும் ஈடுபட்டனர். (ம)

## வீதியை வழிமறித்து மீனவர்கள் போராட்டம்

கொழும்பு, ஏப்.21
எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, காலி - மாத்தறை வீதியை வழிமறித்து மீனவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
காலி பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய மீனவர்கள், தென்மாகாண ஆளுநர் செயலகத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர்.
போராட்டம் காரணமாக காலி நகருக்கு அருகில் உள்ள பல வீதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது. (க-இ)

## சிரித்தபடி படுகொலைசெய்ய ஜனாதிபதியால்தான் முடியும்

*அநுர நேற்று விளாசல்*



கொழும்பு, ஏப். 21
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் மாத்திரமே சிரித்துக்கொண்டே மனிதப் படுகொலைகளைச் செய்ய முடியுமென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்றுக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டு மக்கள் இன்று ஒருவேளை உணவின்றி பட்டினியால் வாடி வருகின்றனர். ஆனால் இந்த அரசுக்கு அதைப்பற்றி கவலையில்லை. மக்கள் வீதிக்கு இறங்கினால் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்படுகின்றது.
பட்டினியால் ஏற்பட்டுள்ள வேதனையே இன்று இவ்வாறு போராட்டமாக வெடித்துள்ளது. மக்களின் போராட்டம் சாதாரணமானது. அவர்களது கோபமும் நியாயமானது. நாளை பிரச்சினை தீருமா? அல்லது நாளை மறுதினம் தீருமா? என்று மக்கள் தினமும் சிந்தித்து வருகின்றனர். தயவுசெய்து மக்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதை உடனடியாக நிறுத்துங்கள். துப்பாக்கி ஊடாக எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது - என்றார். (ம)

## தாக்குதலுக்கு உத்தரவிடும் பொலிஸ் அதிகாரி

*காணொலியால் பரபரப்பு*

கொழும்பு, ஏப். 21
ரம்புக்கனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தின்போது, பொலிஸ் அதிகாரியொருவர் தாக்குதலுக்கு உத்தரவிடும் காணொலி சமூக வலைத்தளங்களில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
ஆர்ப்பாட்டம் கட்டுக்குள் அடங்காமல் சென்றதையடுத்து, மக்களை கலைக்கும் வகையில் காலுக்குக்கீழ் துப்பாக்கிச்சூடு நடத்தவே உத்தரவிடப்பட்டது என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ள நிலையில், மேற்படி பொலிஸ் அதிகாரியின் சர்ச்சைக்குரிய சைகைகளுடன் இந்தக் காணொலி வெளியாகியுள்ளது. (ம)

## மக்கள் போராட்டத்துக்கு தோட்டாக்கள் பதிலில்லை

கொழும்பு, ஏப். 21
மக்களின் போராட்டத்துக்குத் தோட்டாக்கள் ஒருபோதும் பதிலாக அமையாது என்று முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
2015ஆம் ஆண்டு முதல் நான் ஜனாதிபதியாக இருந்த ஐந்து வருட காலப்பகுதியில் நிராயுதபாணிகளான எந்தவொரு பொதுமக்களுக்கும் தோட்டாக்களால் பதிலளிக்கவில்லை - என்றார். (ம)

## இயந்திர விரல் அடையாளப் பதிவை தற்காலிகமாக நிறுத்தக் கோரிக்கை!



சாவகச்சேரி, ஏப். 21
அரச அலுவலகங்களில் தற்போது காணப்படும் விரல் அடையாள வரவுப் பதிவு இயந்திரத்தின் செயற்பாடுகளை சிறிது காலம் நிறுத்தி வைக்குமாறு அரச அலுவலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்
தற்போதுள்ள எரிபொருள் தட்டுப்பாடு, விலையேற்றம் ஆகியவற்றால் தூரப் பிரதேசங்களிலிருந்து பணிக்கு வருவது சிரமமாகவுள்ளது. அத்தோடு எரிபொருள் தட்டுப்பாட்டால் பயணங்களின்போது சிறிது நேரம் அதிகமாகக் காணப்படுவதால் அலுவலகத்துக்கு வரும் நேரம் தாமதமாகவுள்ளது. அதனை ஈடு செய்ய மாலையில் கடமையாற்ற வேண்டியுள்ளது.
இதனால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியில் அலுவலகங்களுக்கு வந்து கடமையாற்றுவதற்கு வசதியாக பதிவு இயந்திரப் பயன்பாட்டை சிறிதுகாலம் நிறுத்தி வைக்குமாறும், இவை சாத்தியப்படாத பட்சத்தில் போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்வதுடன் தமது சொந்த இருப்பிடத்துக்கு அருகிலுள்ள அலுவலகங்களில் கடமையாற்ற தற்காலிக இடமாற்றம் செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14.9)

## பொதுப்போக்குவரத்தில் மாஸ்க் கட்டாயமில்லை

*அமெரிக்க நீதிமன்றம் உத்தரவு*

நியூயோர்க், ஏப்.21
அமெரிக்காவில் விமானம் மற்றும் பிறபயணங்களின் போது பொதுமக்கள் மாஸ்க் அணிவது கட்டாயமில்லை என்று புளோரிடா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
அமெரிக்காவில் கொரோனாத் தொற்றின் தாக்கம் இன்னும் முழுமையாக நீங்கவில்லை. இதனால் கட்டாய முகக்கவசத்துக்கு ஒரு சாரார் ஆதரவும், ஒரு சாரார் எதிர்ப்பும் தெரிவித்தனர். இது தொடர்பாக விசாரணை நடத்திய புளோரிடா பெடரல் நீதிமன்றம் விமானம் மற்றும் பிற பயணங்களின்போது முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை எனவும் மேலும் முகக்கவசம் அணிவது பயணிகளின் விருப்பம் எனவும் அறிவித்துள்ளது. (ச-இ)

English Classes
Gr. 1 to O/L
Grammar With Spoken
T.P.: 077 331 4608

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 06பரப்பு காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி. A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் தென்னைகள் உள்ளன.
பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை,
ஒரு பரப்பின் விலை 450000.00
(தரகர் தேவையில்லை)
ஜெயம்:-
077 814 7389, 077 241 7589

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.